www.tamilarangam.net

# சிந்தனை

கார்த்திகை 1988



**SINTHANAI 4/88 Nov/Dec 1988**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உங்களுடன் சில வார்த்தைகள்.....

சிந்தனை வாசகர்வட்டக் கூட்டங்கள், இலக்கியச் சந்திப்பு போன்ற சந்திப்புக ளில் வாசகர்களிடமிருந்து இருவகையான விமர்சனங்களை சந்திப்புகளில் இருவகையான விமர்சனங்களை வாசகர்கள் முன்வைத் தார்கள். ஒன்று 'சிந்தனை' எல்லோருக்கும் படிக்கக்கூடியதும், விளங்கக்கூடிய விடயங்களைச் சிறிது 'கீழேவந்து' எழுதவேண்டுமென்பது. மற்றது முன்பு தொடர்ச்சியாக வெளிவந்த சித்தாந்தக் கட்டுரைகளுடன், புரட்சிகளின் வரலாறுகளும் எழுதப்பட வேண்டுமென்பதாகும். இந்த இருசாரார்களையும் எப்படித் திருப்திப்படுத்துவதென்பதில் புது வருடத்தில் கவனம் செலுத்துவுள்ளோம்.

இந்த இதழுடன் நான்காவது வருடத்தைப் பூர்த்தி செய்யும் 'சிந்தனை அதன் குறிகோளை நோக்கி மெதுவாகச் சென்று கொண்டிருப்பதை யிட்டு நாம் பெருமிதமடைகின்றோம்.

மேற்கு நாடுகளில் 'தற்காலிக' சுகபோகங்களில் மயங்கியுள்ள சிலர் மத்தியில் 'சிந்தனை' பற்றிய கருத்து வேறுபாடுகள் இருந்த போதிலும் நமது நாட்டில் ஒடுக்கு முறைக்கும் அராஜகத்திற்கும் சமகாலத்தில் முகம் கொடுக்கும் மக்களின் மத்தியில் 'சிந்தனை' க்குப் பெருகிவரும் ஆதரவு உற்சாகமூட்டுகின்றது.

இலங்கை வாசகர்கள் தொடர்பு கொள்ளக்கூடிய விலாசத்தை இந் த இதழுடன் வெளியிடுகின்றோம்.

(தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க.)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வாசகர் கடிதம்

விடுதலை எப்போது?

மகசீன் சிறைச்சாலை
சிறீலங்கா

26.11.88

அன்புடைய சிந்தனை ஆசிரியருக்கு,

யான் அரசபடைகளினால் கைது செய்யப்பட்டு கடந்த இரண்டு வருடங்களாக பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ளேன். கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த நான் வட, கிழக்கிற்கு அப்பாற்பட்ட இடமான மலையகத்தில் கைது செய்யப்பட்டமையினால் இலங்கை இந்திய ஒப்பந்தத்தில் கூட எனக்கு விடுதலை கிடைக்கவில்லை. என்னைப் போல் மலையகத்தைச் சேர்ந்த 175 பேர் இன்னும் தடுத்து வைக்கப்பட்டுள்ளோம். எங்கள் விடுதலைக்கு "சிந்தனை" வாயிலாக தங்களால் இயன்ற முயற்சிகளை செய்யுமாறு அன்பாக வேண்டுகிறேன். வெளிநாட்டிலிருந்து கிடைக்கும் உதவிகளைக்கூட உண்மையிலேயே துன்பத்திலும் வறுமையிலும் வாடும் எம்போன்றவர்களுக்கு உதவிசெய்யாமல் அதனைக்கூட சில நிறுவனங்கள் சுருட்டிக்கொள்கின்றன. நாம் மிகவும் துன்பகரமான கட்டத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதனை மீண்டும் வற்புறுத்துகிறோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாம் இவ்விதம் இருக்கையிலேயே தங்களின் "சிந்தனை" சஞ்சிகையினை கண்ணுற்றேன். உண்மையிலேயே அது எமது 'சிந்தனை'யைத் தூண்டுவதாகவும் சிந்தனைக்கு விருந்தாகவும் இருந்தது. அவற்றுள் ஒன்று 1988 ஆண்டு புரட்டாதி மாத இதழ், ஏனைய நான்கும் சென்ற வருடத்து இதழ்கள். இச் சஞ்சிகைகளைக் காணும் வரையும் "சிந்தனை" என்னும் இதழ் வெளிவருவது எனக்குத் தெரியாது. இப்போதுதான் அறிந்து கொண்டேன். தங்களின் தொடர்பு கிடைத்தவுடன் எமது தொடர்பு நீளும். யானும், ஒரு வளரத்துடிக்கும், வளர்ந்து வரும் கலைஞன். எனது கருத்துக்களும் 'சிந்தனை'யில் தொனிக்க வேண்டுமென அவாவுடையோனாகவுள்ளேன். அதற்கு வாய்ப்புத் தருவீர்கள் என்று நம்புகின்றேன்.

யானும் எனது நண்பர்கள் சிலரும் இனிமேல் தொடர்ந்து "சிந்தனை"யினை பெறவேண்டும். அதற்கு உடனடியாக ஆவன செய்யுங்கள்.

'சிந்தனை' முற்போக்கு அரசியல் சஞ்சிகையாக இருப்பினும் நடுநிலை தவறாமல் செயற்படுவது போலத்தான் உள்ளது. எனினும் அதனைத் தொடர்ந்து சுவைத்ததன் பின்பே அறுதியிட்டு அதன் நிலையை என்னால் கூறமுடியும். என்றாலும் மிகவும் சிறப்பாக இருந்தது. மேல் நாடுகளில் வாழும் தமிழர்களுக்கு "சிந்தனை" ஒரு வரப்பிரசாதம். அவர்கள் அதனை நன்றாகப் பயன்படுத்த வேண்டும், என்று கூறி விடைபெறுகிறேன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இலக்கியம் வளர்ப்போம், இலட்சியத்தோடு.

இவ்வண்
"சிந்தனை" நேசன்
ம. சேகரன்

(உங்களுடன் சில வார்த்தைகள். -தொடர்ச்சி)

வாசகர்களின் வேண்டுகளுக்கமைய ரஷ்யப்புரட்சியின் வரலாறு இந்த இதழில் இடம் பெறுகின்றது. பல நூல்களில், நூற்றுக்கணக்கான பக்கங்களில் எழுதப்பட வேண்டிய வரலாற்றை ஒரு சஞ்சிகையின் சில பக்கங்களுக்குள்ளடக்குவது மிகவும் கடினம். சித்தாந்த வாக்குவாதங்கள், தனிநபர் பங்குகள், சமகால நிகழ்ச்சிகள் எல்லாவற்றையும் ஒரு கட்டுரையினுள் தருவது முடியாததொன்றாகும். கூடியவரை சுருக்கமாகவே வரலாறு எழுதப்பட்டுள்ளது. இருந்தும் பல பக்கங்களை இந்தக் கட்டுரை எடுத்துவிட்டதால் பல ஆக்கங்களை அடுத்த இதழுக்கு ஒத்திவைக்க வேண்டியேற்பட்டுள்ளது. ஆக்கதாரர்களிடம் இதற்காக மன்னிப்புக் கோருகின்றோம். அ.கு.

'சிந்தனை'யில் வெளியாகும் கதைகள், கட்டுரைகள் ஆகியவற்றில் தெரிவிக்கப்படும் கருத்துக்கள், அவற்றின் ஆக்கதாரர்களின் கருத்துக்களேயாகும். அவை 'சிந்தனை' ஆசிரிய குழுவின் கருத்துக்களாக இருக்க வேண்டிய அவசியமில்லை.

அட்டைப்படம் — முடிமன்னர்களையும், நிலப்பிரபுக்களையும், முதலாளித்துவத்தையும், தோழர் லெனின் உலகப்பரப்பிலிருந்து துடைத்து எறிவதாகச் சித்தரிக்கும் ஒரு கார்டூன் படம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இன்றைய தேவை வெறும் புனர்வாழ்வல்ல;

# இளைஞர்களின் உள்ளங்களும் புதுப்பிக்கப்படல் வேண்டும்

## யாழ் சென். பற்றிக்ஸ் விழாவில் அதிபர் உரை

(நமது நிருபர்)

இன்றைய காலத்தின் தேவை வெறும் புனர் வாழ்வு மாத்திரமல்ல. எமது இளைஞர்களின் உள்ளங்கள் புதுப்பிக்கப்பட வேண்டும். இப்புதுப்பித்தலில் அரசியல் வாதிகள், அதிகாரிகள், ஆசிரியர்கள், இளைஞர் தலைவர்கள், மத நிறுவனத்தினர் ஈடுபடவேண்டும்.

இவ்வாறு யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரியின் அதிபர் வண. பிரான்ஸிஸ் ஜோசப் இக்கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது:

'கடந்த சில ஆண்டுகளாக வாழ்வு என்பது வலுவிழந்து நேர்மை, உண்மை, ஒழுக்கம், பொறுமை, மனித நேயம் என்பன சிதைந்து போயின. நிகழ்வுகள் பிஞ்சு உள்ளங்களை பாதித்துள்ளன. அனர்த்தங்கள் உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் அழிக்க முடியாத வடுக்களாகிவிட்டன. இவ்வடுக்கள் ஆற நீண்டகாலமாகலாம்.

காலத்தின் தேவை வெறும் புனர்வாழ்வல்ல. இளைஞர்களின் உள்ளங்கள் புதுப்பிக்கப்படல்வேண்டும். இதில் சமூகத்தின் அனைவரும் பங்கெடுக்க வேண்டும். இன்றைய நிலையில் சிறிய முயற்சிகள் எதுவும் போதுமானவை அல்ல. சிறிய தியாகங்களும் பயனளிப்பதாக இல்லை. சமுதாயத்தைப் புனரமைப்பது என்பது கல்வியில் இருந்து ஆரம்பிக்கப்பட வேண்டும். பகைமை நீங்கப்பெற்று மனிதமாண்பு, சமத்துவம், சமாதானம் நிறைந்த நீதியான சமூகத்தை உருவாக்கும் கல்வி முயற்சிவேண்டும்.

அதிகாரத்தில் இருந்தவர்களின் தான் தோன்றித்தனங்களினால் கடந்த இருதசாப்தங்களாக கல்வி முறையில் ஏற்படுத்தப்பட்ட எண்ணில் அடங்காத மாற்றங்களையிட்டு அவர்களை எவரும் மன்னிக்கமுடியாது.

இப்பேற்பட்ட மாற்றங்களினால் தான் மாணவர்கள் பரிசோதனைப் பொருட்களாக்கப்பட்டனர். எனவே காலத்தின் தேவையை கருத்திற்கொண்ட ஆணித்தரமான கல்வித்திட்டமும் செயற்பாடும் உருவாகவேண்டும்.

நன்றி — வீரகேசரி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிந்தனை



## ஆசிரியர் கருத்து

தேர்தல் என்பது மக்களின் அரசியலுணர்வுகளை அளப்பதற்கான ஒரு வெப்பமானியாகும். கிழக்கிலங்கையில் நவம்பர் 19ம் திகதி நடைபெற்ற மாகாணசபைத்தேர்த்தலின் மூலம் மக்களின் இன்றைய தேவைகளும் உணர்வுகளும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

அறுபது வீதத்திற்கும் மேற்பட்ட மக்கள் வாக்களிப்பில் கலந்து கொண்டதன் மூலம் சமாதானத்துடன் கூடிய 'ஜனநாயக' அரசியலையே மக்கள் தற்போதைய நிலைமைகளில் விரும்புகிறார்கள் என்பது நிரூபனமாகின்றது. குறைந்தபட்ச மக்கள்ஜனநாயகத்தையாவது நடைமுறைபடுத்துவதற்கு கிடைத்த ஒரு சந்தர்ப்பம் பாவிக்கப்பட்டு விட்டது. ஜனநாயகத்திற்கும் சமாதானத்திற்கும் மிகுந்த அச்சுறுத்தல்களும் மிரட்டல்களும் சூழ்ந்தநிலையிலும்கூட மக்களின் அபிலாசைகள் என்னவென்பது தெளிவுபடுத்தபட்டுள்ளது. மக்களின் நிரந்தர மௌனத்திற்கும் குழப்பத்திற்கும் இடையில் செய்யப்பட்ட தேர்தல்களுக்கு எதிரான பகிஷ்கரிப்புகளுக்கும் கொலைபயமுறுத்தல்களுக்கும் மக்கள் ஜனநாயகமுறையிலேயே பதில் சொல்லியிருக்கின்றார்கள்.

60 வீதமான மக்கள் ஜே.வி.பியினரும் தமிழீழ விடுதலைப் புலிகளி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

னதும் மாகாணசபைத் தேர்தல்களுக்கெதிரான பகிஷ்கரிப்புக்களை நிராகரித்துவிட்டார்கள். மக்களின் உண்மையான அபிலாசைகளிலிருந்து இப்பகிஷ்கரிப்புக்கள் அந்நியப்பட்டு நிற்கின்றன.

இந்த தேர்தல்களில் யார் கூடிய ஸ்தானங்களைப் பெற்றார்கள் என்பதல்ல முக்கியம். மக்களின் ஜனநாயகஉரிமைகளைப் பாதுகாப்பதற்காக கிடைக்கும் அனைத்து சந்தர்ப்பங்களையும் பயன்படுத்துவதுதான் சரியான வழிமுறையாகும். 60 வீதத்திற்கு மேற்பட்ட மக்களின் எண்ணங்களை அறிந்து கொள்வதற்காக அமைந்த தேர்தலை வரவேற்பதென்பது மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளிப்பதாகவே அமையும். வாய் பேசமுடியாத நிலையிலிருந்த மக்களின் கருத்துக்கள் வெளியே தெரிவதற்காக ஏற்படுத்தப்படும் எந்தவிதமான ஜனநாயக வடிவத்தையும் ஆதரிப்பதே எந்தவொரு ஜனநாயக முற்போக்குவாதியினதும், இதயசுத்தியுடன் அரசியலை அணுகும் ஒவ்வொருவருடைய கடமையாகும். மக்களின் கருத்துக்கள் வெளியே வருவதைக் கண்டு அஞ்சுவதும், தடுக்கமுயல்வதும் தடுப்பவர்களை ஆதரிப்பதுவும் மக்கள்விரோதச்சக்திகளுக்குத் துணை போவதேயாகும்.

இருண்டு போன மரணபயம் சூழ்ந்த குழப்பநிலையில் மக்கள் தொலைத்துவிட்டுத் தேடிக்கொண்டிருக்கும் ஜனநாயகத்தையும் மனிதாபிமானத்தையும் குறிபார்த்து வேட்டுவைப்பவர்கள் எந்தவிதமான மக்கள் ஜனநாயக நடவடிக்கைகளிலும் நம்பிக்கையற்றவர்களாய்த்தான் இருக்கமுடியும். இந்த தேர்தல் நடந்து முடிந்த பிறகும்கூட தேர்தலில் பங்குபற்றிய வேட்பாளர்களுக்கும் பங்குபற்றிய மக்களுக்கும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எதிரான கொலைவெறி நடவடிக்கைகள் இன்னமும் தொடர்கின்றன. விரக்தியின் மத்தியிலும் தமக்கு கிடைத்த முழுச்சந்தர்ப்பத்தையும் பயன்படுத்தி மக்கள் வாக்களித்த உண்மையை மறுப்பதற்கும் மறைப்பதற்கும் துப்பாக்கிகளும் மிரட்டல்களும் பொய்ப்பிரசாரங்களும் மாறிமாறி பாவிக்கப்படுகின்றன.

கொலைபயம் சூழ்ந்த நிலையிலிருந்து விலகி மக்கள் தமது சொந்த கருத்துக்களைத் தெரிவிக்கும் ~~அரசியல்~~ சுதந்திரமான அரசியலுக்கு வர வேண்டுமென்பதில் இரண்டு கருத்துக்கள் இருக்கமுடியாது. ஆயுதங்களுக்கிடையில் நிரந்தர மௌனிகளாகிவிட்ட மக்களின் மௌனம் கலைவதை விரும்பாத அராஜகச்சக்திகள் குறுகிய நோக்கத்துடன் செய்யும் குருட்டுத்தனமான நடவடிக்கைகளைக் கண்டபின்னரும்கூட அவற்றிற்கெதிராக குரல் கொடுக்காமல் மௌனம் சாதிப்பவர்களின் வரிசையில் நாமும் இருக்க விரும்பவில்லை.

இந்தவகையில் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் இன்றைய பரிதாபகர அரசியலை இங்கு குறிப்பிடவேண்டியது அவசியமாகின்றது. இவர்கள் இன்று தமது தமது பிரசாரங்களில் மாகாணசபைத் தேர்தல்கள்பற்றிச் செய்யும் அவதூறுகளையும் இந்த தேர்தல்களில் பங்குகொண்டவர்களை விமர்சிக்க ஆரம்பிப்பதையும் கடந்தகால அனுபவங்களில் தெளிவான பார்வை கொண்டவர்களாலும், நிதான புத்தி கொண்டவர்களினாலும் ஏற்றுக்கொள்ளமுடியாது. தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தினர் 28.07.87 அன்று வெளியிட்ட அறிக்கையின் மூலம் இலங்கை-இந்திய சமாதான ஒப்பந்தத்தை ஆதரித்தபோது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதனுள்ளடங்கும் மாகாணசபை தீர்மானங்களையும் சேர்த்தே ஆதரித்தார்கள். இன்று சமாதான ஒப்பந்தம் பயனற்றது என்றும் மாகாணசபைத் தேர்தல்களை எதிர்ப்பதும் சந்தர்ப்பவாதமேயாகும். தமிழீழ மக்கள் விடுதலை கழகமானது தமக்குள் நடந்த உட் கொலைகளைப் பற்றியோ சித்திரவதைகள் பற்றியோ பூரணமான சுயவிமர்சனத்தை வைக்காமல் மக்கள் முன்வரக்காட்டியத் தயக்கத்தை யாவராலும் விளங்கிக்கொள்ளமுடியும். சுயவிமர்சனங்கள் மூலம் ஜனநாயக அரசியலுக்குத் திரும்புவதற்கு கறைகளைக் கொண்ட தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் தலைமை தயக்கம் காட்டுகின்றது. இன்றுள்ள யதார்த்த நிலைமையில் மக்களுக்கு சாதகமான முறையில் ஜனநாயக அரசியலில் ஈடுபட்டு குறைந்தபட்ச ஜனநாயகத்தையாவது நிலைநிறுத்துவதற்குப் பதிலாக சவுக்குத்தோப்புக்களில் உட்கட்சி ஜனநாயகத்தைப் புதைத்ததையும் மாலைதீவில் கட்டுநல்காரர்களின் ஆசிர்வாதத்துடன் கூலிப்பட்டாளங்களாகச் சென்று அம்பலப்பட்டுவிட்டதையும் "ஜனநாயக நடவடிக்கை" என்று சொல்கின்றார்கள்? தமிழீழ விடுதலைப்புலிகளும் தமிழ் மக்கள் விடுதலைக் கழகமும் மக்களிடம் தமக்கு ஆதரவு இருக்கின்றது என்பதை நிரூபிக்கும் சந்தர்ப்பத்தை நழுவவிட்டுவிட்டார்கள்.

மறுபுறத்தில்

இன்று மாகாணசபைத்தேர்தல்களில் பங்குகொண்ட இயக்கங்களுக்குச் சில வார்த்தைகள்.

இலங்கை—இந்திய ஒப்பந்தத்தின் மூலமாகவோ அது உள்ளடக்கிய மாகாணசபைகள் மூலமாகவோ, தமிழ்ப்பேசும் மக்களின் பிரச்சனைகளுக்கும் பூரணமான தீர்வைக் கொண்டுவரமுடியுமென்று தெரிவு

www.tamilarangam.net

செய்யப்பட்ட எந்த இயக்கமும் ஏற்றுக் கொண்டதாகவில்லை. ஏற்றுக்கொள்ளவும் முடியாது. கடந்த நான்கு வருடங்களுக்கும் மேலாக அரசபயங்கரவாதத்தினால் பாதிக்கப்பட்டு சொந்த நாட்டிலேயே அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் மக்களுக்கான புனருத்தாரணப்பணிகளே இன்றைய அவசர கடமைகளாகும்.

அராஜகத்தின் ஆழுமையில் பாதுகாப்பற்றிருக்கும் மக்களுக்கு பாது காப்பளிக்கவும், சிறிலங்கா ராணுவ—பொலிஸ் தலையீடுகளை இல்லாமல் செய்யவும், இந்தியப் படைகளின் கண்காணிப்புகளிலிருந்து மக்களைவிடுவிக்கவும் கூடியதான ஒரு காவல்த்துறையை உருவாக்கு வதும் அவசியமாகும்.

மீண்டும் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்ட முற்படும் பொழுது கொலைகளையும் கொள்ளைகளையும் தொடர்ந்து கொண்டிருக்கும் அராஜகசக்திகள் தனிநபர்பயங்கரவாதத்தினைத் தொடருமென்பதில் சந்தேகமிருக்க முடியாது. ஆனால் இந்த அராஜக சக்திகளுக்கு எதிராக எடுக்கப்படும் நடவடிக்கைகள் மக்களின் தனிமனித சுதந்திரங்களைப் பாதிப்பதற்கோ அல்லது சட்டமீறல்களாக உருவெடுப்பதற்கோ இடமளிக்கக் கூடாது.

இல்லாமல் போய்விட்ட பேச்சுச்சுதந்திரம், பத்திரிகைச்சுதந்திரம் தொழிற்சங்கஉரிமையாகியவை மீண்டும் உயிர்பெற கைகொடுக்க வேண்டும்.

ஒடுக்கப்படும் மக்களின் இன்னமும்வெல்லப்படாத இலட்சியங்களுக்கான போராட்டங்களுக்கான அத்திவாரங்களை இடுவதற்கான சந்தர்ப்பம் இன்று உங்களுக்குக் கிடைத்துள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிறுகதை

# ஒரு அம்மாவும் அரசியலும்

- பார்த்திபன்

சோறு ஆக்கி முடித்து, சமையலறையை விட்டு சின்னமணி வெளியில் வந்த போது தபாற்காரன் சத்தமாக பொறுமையிழந்திருந்தான். சைக்கிள் மணிச்சத்தத்தில் அவனுடைய ஆத்திரம் வெளிப்பட்டது.

சின்னமணி அருகில் வந்ததும் கடிதத்தை எறியாத குறையாக நீட்டிவிட்டு, தனக்குள் திட்டியபடி அடுத்த வீட்டுக்குப் போனான்.

நீலக்கடிதம், சின்னமணியின் இரண்டாவது மகன் தாசன் மேற்கு ஜேர்மனியிலிருந்து அனுப்பியிருந்தான். ஈரக்கையை சேலையில் துடைத்துவிட்டு கடிதத்தை பிரித்தபடி சின்னமணி வீட்டுக்குள் வந்தாள்.

அன்புள்ள அம்மா, என்பதில் ஆரம்பித்து, நலமறிய அவாவி, இறைவனை வேண்டி, தொடர்ந்த கடிதத்தில், சில புதினங்களும் இருந்தன.

".....நாட்டு நிலைமைகளை வீரகேசரியில் பார்த்தேன். போகிற போக்கில் சுமுகமான நிலைமை வரலாம் போலிருக்கிறது. இனி இங்கே அரசாங்கம் மறுபடி எங்களுடைய பிரச்சினையை கிளறப்போகிறார்கள். பிரச்சினை முடிந்து விட்டது, ஆகவே தமிழர்களை திருப்பியனுப்ப வேண்டும், என்று பாராளுமன்றத்தில் அமைச்சர்கள் கதைக்க இருப்பதாகப் பலர் பேசிக்கொள்கிறார்கள். எனக்கு இப்போதுதான் வேலை கிடைத்திருக்கிறது. இந்த நிலையில் இப்படியான செய்திகளை கேட்க கவலையாக இருக்கிறது. இங்கேயுள்ள நீதிமன்றத்தில் எனது அரசியல் தஞ்சத்தை விசாரிக்க திகதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தந்து விட்டார்கள். இதனுள் பக்கத்து வீட்டு பரமேசக்காவின் உடைந்த வீட்டின் கலர்ப்படமொன்றும், வேலுப்பிள்ளையைச் சுட்டுக் கொன்ற பத்திரிகைச் செய்தியையும், உடனே எனக்கு அனுப்பி வையுங்கள்.

முதற் கடிதத்திலும் இதைப் பற்றி எழுதியிருந்தேன். இன்னும் பதிலே வரவில்லை. எங்கட சித்தப்பாவிற்கும் பெயர் வேலுப்பிள்ளை என்றபடியால், ஒருமாதிரிச் சரிக்கட்டலாம். எனவே உடனே அனுப்பி வையுங்கள்.

அண்ணை வீட்டுப் பக்கம் வாறவரே? சந்திச்சா சாக்கிரதையா இருக்கச் சொல்லி சொல்லுங்கோ, அவற்ற இயக்கத்திற்கு இப்போ டிமாண்ட் இல்லாதபடியால் வேறு ஆக்களால பிரச்சினை வரலாம்.

வேற என்ன? நான் கேட்டதுகளை உடனே அனுப்பி வையுங்கோ........"

என்று கடிதம் போய் இப்படிக்கு தாசன் என்று முடிந்திருந்தது. முதல் கடிதம் வந்த போதும் சின்னமணிக்கு ஒன்றும் விளங்கவில்லை. இப்போதும் ஒன்றும் புரியவில்லை, குழம்பினாள்.

அவன்ர அரசியல் தஞ்சத்திற்கும் பக்கத்து வீட்டுக்கும் என்ன சம்பந்தம்? ஊர்த்தொங்கலில் இருக்கும் ரக்ரர்கார வேலுப்பிள்ளை செத்த செய்தி உவனுக்கேன்? சிலவேளை இதுகளைக்காட்டி ஜேர்மன் கவுண்மேந்தில இருந்து உதவி வாங்கி பரமேசின்ர வீட்டை திருத்திக் கட்டப்போகிறானோ?

வேலுப்பிள்ளையின்ர குடும்பத்திற்கு நிதி உதவி செய்யப் போகிறானோ? உவனுக்கேன் ஊர்த் தெளவாரம் எல்லாம்? இஞ்ச இருந்து போய் நாலு வருசமாச்சு, பயணத்துக்கு கடன் வாங்கினதுக்கு நான் வட்டி கட்டி கொண்டிருக்கிறன். போய் இந்த நாலு வருசத்தில ஒரு சதம் கூட அனுப்பேல, ஊர் அலுவல கவனிக்க வெளிக்கிட்டான்.

கண்டறியாத அரசியலும் தஞ்சமும், இஞ்ச இப்படி கூத்தடிப்பானெண்டு வெளிநாட்டிற்கு அனுப்பின அங்கேயும் அரசியல் தொடங்கிறான்.

சின்னமணிக்கு குழப்பம் போய் கோபம் வந்தது. கடிதத்தை தாறுமாறாக மடித்து இடுப்பில் செருகிக் கொண்டாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவளுக்கு இரண்டு மகன்கள். மூத்தவன் ராசன். எண் பத்தி மூன்றும் ஆண்டு கலவரத்தின் போது திடீரெனக் காணமல் போய்விட்டான். சின்னமணி கலங்கிப் போனள். இராணுவத்தால் பிடிக்கப்பட்டு விட்டானே? என்ற பயத்தில் விதானையைப் பிடித்து விசாரித்தும், உருப்படியான தகவல்கள் கிடைக்கவில்லை. சில மாதங்களின் பின் இயக்கமொன்றில் இணைந்து கொண்ட கதைதான் ஊரில் பரவியது.

சின்னமணி தொடர்ச்சியாக சில வாரங்களுக்கு குமுறினள். "படிப்பை நாசமாக்கினலும் பரவாயில்லை, என்னை விட்டிட்டு போட்டானே! பூச்சியைக் கண்டால் கூட விழுந்தடிச்சு ஒடுறவன் துவக்கு பிடிக்கிருனே?" என்று நெஞ்சிலடித்து அழுதாள்.

படிப்பை எப்போதோ நிறுத்திக் கொண்ட ராசன் சாப்பிடவும், படுக்கவும் மட்டும்தான் வீட்டுக்கு வருவான். இதனல் அவனின் இல்லாமை சின்னமணியை பெரிதும் பாதிக்கவில்லை. மகன் தன்னோடு இல்லாமல் போய் விட்டானே! அவனுக்கு என்ன ஆகுமோ என்றுதான் பயந்தாள்.

ராசன் இப்படி நடந்து கொண்டபின் சின்னமணி உசாரானள். இரண்டாவது மகன் தாசனின் நடவடிக்கைகளை கூர்ந்து கவனிக்கத் தொடங்கினள். அவனிலும் வித்தியாசம் தெரிவது போலிருக்கவே எச்சரிக்கையாகி விட்டாள்.

விட்டால் இவனும் தமையனேடு போய்ச் சேர்ந்து விடுவான், பிறகு எனக்கு கொள்ளி வைக்க ஊரிலதான் ஆக்களைத் தேட வேணும்! என்ற யோசனைக்குப்பின் ஊரில் காசு மாறி அவசர அவசரமாக தாசனை மேற்கு ஜேர்மனிக்கு அனுப்பி வைத்தாள். தாசனவது தனக்கென்று இருக்க வேண்டுமென்ற ஆசை அவளுக்கு.

ஆனல் அவள் எதிர்பார்த்ததிற்கு மாருக, தாசன் நடந்து கொண்டான். போன புதிதில் கிழமைக்கு இரண்டாக அவனிடமிருந்து வந்த கடிதங்கள், மாதங்கள் செல்லச் செல்ல மாதமொன்ருகி, பின் காலாண்டாகி இப்போது வருடத்திற்கு இரண்டாக வெளி வந்து கொண்டிருக்கிறது.

சின்னமணி தலையில் கை வைத்துக் கொண்டாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவசரப்பட்டுக் கொண்டதற்காக தன்னை நொந்தாள். தனக்கு யாருமில்லையே என்று தொடர்ந்து கவலைப்பட்டுக் கொண்டாள்.

கதவு திறக்கும் சத்தம் கேட்டு சின்னமணி ஜன்னலை விட்டு எழுந்த போது பாலன் உள்ளே வந்தான்.

பாலன் சின்னமணியின் சகோதரனுடைய மகன். தங்கச்சி பாவம் என்பது மட்டுமல்லாமல், சாப்பாட்டுக்கு ஒரு பிரஜை குறைவதன் மூலம் விலைவாசி ஏற்றத்தைத் தமாளிக்கலாம் என்ற யோசனையிலும் பெற்றோர்கள் பாலனை சின்னமணியிடம் ஒப்படைத்தனர்.

சின்னமணி தனக்கென்று ஒரு துணை தேவைப்பட்டதால் பாலனை பொறுப்பேற்றுக் கொண்டாள். தலைக்கு எண்ணெய் தேய்த்து விடுவதிலிருந்து, அழுக்கு உடைகளை சலவை செய்வது வரை பாலனை அக்கறையாக கவனித்துக் கொண்டாள்.

பிள்ளைகள் தன்னை கைவிட்ட சோகத்தை அவள் பாலனுக்குத்தான் சொல்லி அழுவாள். அவர்களின் பொறுப்பின்மையைப் பற்றி திட்டிக் கொள்ளுவாள். தனக்கு யாருமேயில்லையென்று அங்கலாய்த்துக் கொள்ளுவாள். இந்த நேரங்களில் பாலன் ஏதாவது தாளில் ஏதாவது படம் கீறிக் கொண்டிருப்பான்.

சின்னமணி பாலனுக்கு சாப்பாடு போட்டு விட்டு, அவனை விளையாட அனுப்பி விட்டு, பின் வீட்டு சரோசாவிடம் வந்தாள். சின்னமணிக்கும் சரோசாவிற்கும் ஒரே முதிய வயது.

அதனால் நிறைய கதைப்பார்கள். தொடர்பில்லாமலும், சம்பந்தமில்லாமலும், நீளமாகவும், கருதலாகவும்...

இருவரும் வீட்டு விறாந்தையில் உட்கார்ந்து பாக்கு, வெற்றிலைகளை மென்றபடி தமது நிகழ்ச்சிகளை ஆரம்பித்தார்கள். அவர்களுடைய உரையாடலில் மங்கையர் மஞ்சரி, நேயர் விருப்பம் செய்தியின் பின்னணியில் போன்ற பல அம்சங்கள் இடம் பெறும்.

"லெக்சன் வருதெண்டு சனங்கள் கதைக்குது என்னவாம்?" சரோசா ஆரம்பித்தாள்.

"இச்ச இல்லையாம்' அங்காலப்பக்கங்களிலை தானும்" சின்னமணி சொல்லி விட்டு, சிவப்பு சாயத்தைத் துப்பினாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"எலக்சன் முடிந்தபின் இந்தியனாமி வெளிக்கிடுமோ?" சரோசா குழம்பியபடி விசாரித்தள்....

"ஆருக்குத் தெரியும்?... எங்களுக்கு விளங்கிற மாதிரி ஏதேனும் நடக்குதே? அல்லாட்டி ஆரேன் எங்களிட்ட அபிப்பிராயம் கேக்கினமோ? அததை தன்ர பாட்டில நடக்குது" எண்டு போட்டுக்க ஒடித்தப்பிறதுதான் எங்கட வேலை" சின்னமணி அலுத்துக் கொண் டாள்.

பிறகு ஊர் விவகாரங்களை ஆராய்ந்து கொண்டிருக்கும் போது சின்னமணிக்கு மகனின் கடிதம் ஞாபகத்திற்கு வந்தது.

அதன் சாராம்சத்தை மட்டும் சரோசாவிடம் சொன்னாள்.

"எனக்கெண்டா பெடியன் என்ன எழுதியிருக்கின்றா னெண்டு ஒண்டுமா விளங்கேல" அங்க என்ன செய்றான் எண்டும் ஒன் றும் தெரியல" சின்னமணி சலித்துக் கொண்டாள்.

இப்போது சரோசா சிவப்புச் சாயத்தை துப்பி னாள்.

"உது விளங்காட்டி பிறகென்ன? உன்ர மூத்தவன் மாதிரி இளையவனும் அரசியலில் இறங்கிட்டான்.. அதுதான், அரசியல் தத்துவமெல்லாம் விளக்கமா எழுதிப் போட்டனே?... நீ குடுத்து வைச்சனி" நாட்டுக்கு சேவை செய்யவெண்டே பிள்ளையளை பெத் திருக்கிறாய்"

இதைக் கேட்ட போது சின்னமணிக்கு முதலில் பெரு மையாக இருந்தாலும், பழைய சம்பவம் ஒன்று ஞாபகத்திற்கு வந் தது...

ஒரு வருடத்திற்கு முந்தி ஒரு நாள் இரவு சின்னம ணியின் வீட்டுக் கதவு பலமாகத் தட்டப் பட்டது. கதவைத் திறக்க லாமா விடலாமா என்று அவள் யோசித்தாள்.. பக்கத்தில் பாலன் உறக்கத்தின் உச்சத்தில் இருந்தான்.

வீட்டில் களவு போகக் கூடிய பொருட்கள் தன்னை யும், பாலனைத் தவிர வேறு எதுவும் இல்லையென்று தெரிந்ததால் தைரியமாகக் கதவைத் திறந்தாள்.

வெளியே நின்றிருந்த சந்திரன் படாரென உள்ளே வந்து கதவைத் தாளிட்டான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அவனையும், அவனுடைய வேகத்தையும் பார்த்து சின்னமணி திடுக்கிட்டு போனாள். சந்திரன் அதே ஊரிலிருக்கும் சாரதாவின் மகன். ராசனின் நெருங்கிய தோழன்; சின்னமணியிடம் பலமுறை சாப்பிட்டிருக்கிறான்.

ராசன் திடீரென மறைந்த நாட்களிடையில் இவனும் மறைந்தான். இயக்கத்தில் சேர்ந்து விட்டதாக பின்னர் தகவல் வந்தது.

அப்போது காணமல் போன சந்திரன் இப்போதுதான் வந்திருந்தான். அதுவும் வித்தியாசமான கோலத்தில்.

"மாமி காப்பாத்துங்கோ" சந்திரனின் வாயிலிருந்து வார்த்தைகள் சிரமமாக வந்தன. தலை கலைந்து, உடைகள் கசங்கியிருந்தன. உடல் ஆடியது.

"என்ன? என்ன?" சின்னமணி விளங்காதவளாய் பரபரத்தாள்.

"மாமி காப்பாத்துங்கோ" அவன் தேடிக் கொண்டு வாறான்." சந்திரனால் தொடர்ந்து கதைக்க முடியவில்லை.

அவன் ஏதோ ஆபத்திலிருந்து தப்பி வருகிறான், என்று மட்டும் அவளுக்கு தெரிந்தபோது, கதவு மறுபடியும் தட்டப் பட்டது.

"திறக்காதைங்கோ" அவன்தான் வாறான்" என்று சந்திரன் கூக்குரலிடுமுன், சின்னமணி கதவைத் திறந்து விட, ராசனும் இன்னும் இருவரும் கையில் பாரங்களுடன் தடதடவென்று உள்ளே வந்தனர்.

"ராசன்" நிலமையை மறந்து சின்னமணி கத்தினாள். எத்தனை வருடங்களுக்கப் பிறகு மகனை மறுபடியும் முழுசாகப் பார்க்கிறாள். பாசம் பீறிட்டு வந்தது.

சந்திரனை பார்த்த ராசன் அவளை லட்சியம் செய்யவில்லை. ஓட முயற்சிக்கையில் சந்திரனை மற்ற இருவருடன் சேர்ந்து மடக்கி பிடித்தான்.

பிறகு எல்லோருமாகச் சேர்ந்து அவனை தரதரவென இழுத்துக் கொண்டு வெளிக்கு வந்தார்கள்.

"ராசன்" என்னடா இது?" திகிப்பிரமையடைந்த சின்னமணி கேட்டாள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"அம்மா" நீ இதில தலையிடாத, இது அரசியல். உனக்குத் தேவையில்லாத விசயம், சொன்னாலும் விளங்காது" ராசன் அழுத்தமாக சொல்லி விட்டு போனான்.

அடுத்த நாள் சாரதாவின் ஒப்பாரியுடன் காலை புலர்ந்தது.

பாதையின் அருகே, பற்றைகளுக்குள் சந்திரன் ரத்தமாகக் இறந்து கிடந்தான். கண்கள் விரியத் திறந்திருந்தன.

சாரதா அருகிலிருந்து அழுது கொண்டிருந்தாள். கொஞ்சம்கொஞ்சமாக கூட்டம் சேர்ந்தது. சேர்ந்த கூட்டம் சிறிது நேரம் மௌனமாக அஞ்சலி செலுத்தியது. பின்னர் வழமை போல் தமது அரசியல் ஞானத்தை ஆளுக்காள் அவிழ்த்துக் கொட்ட ஆரம்பித்தார்கள்.

சின்னமணியைக் காட்டியும் சனம் கதைத்தது. அவைகளில் சில அவளின் காதுகளிலும் விழுந்தன.

"உது ராசன்ர ஆக்களின்ர வேலையாம்"

"அவன்ர ஆக்களுக்கும், இவன்ர ஆக்களுக்கும் சரி வராதாம்"

"ரண்டு பேரும் நல்லா பழகினவங்களெல்லே"

"சிநேகிதம் வேற' அரசியல் வேற' அவன் ராசன் செய்ததும் சரிதான்" உவைதரவலிக்கு உது வேணும், சொல்லி விளங்கப்படுத்த ஏலாது!"

அவர்களின் கதையிலிருந்து சின்னமணிக்கு கொஞ்சம் புரிந்தது. அவளால் அதனை ஜீரணிக்க முடியவில்லை.

சாரதாவைப் பார்த்தாள். சந்திரனைக் கட்டிப் பிடித்து, அழுது, தன்னுடைய உடம்பிலும் ரத்தத்தை பூசிக் கொண்ட சாரதா சின்னமணியை பார்த்த பார்வையில் நெருப்பெரிந்தது.

சின்னமணி குறுகிப் போனாள். ஊரச் சனங்கள் தன்னை என்ன செய்யப் போகுதோ எனப் பயந்தாள். ஆனால் அவள் எதிர்பார்த்ததிற்கு மாறாக நடந்தது.

பலர் அவள் காது பட "நீ யோசியாத" அரசியலை இது சகசம், உன்ர பெடியன் சரியான வேலையைத்தான் செய்து இருக்கிறான்!" எனச் சொல்லி விட்டுப் போனார்கள்.

சில மணித்தியாலங்களில் சாரதாவையும், உதவியாளர்களையும் தவிர கூட்டம் கரைந்து விட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சின்னமணி கனத்த நெஞ்சுடன் வீட்டுக்கு வந்தாள். அதன் பின் கொஞ்ச நாட்கள் அவள் வெளியில் தலை காட்டவில்லை.

"என்ன நித்திரை கொள்ளுகிறாய்?" சரோசா தட்ட சின்னமணி பழைய ஞாபகத்தை கலைத்துக் கொண்டாள்.

தேர்தல் திகதி அறிவிக்கப் பட்டு, நடந்து முடிந்தது. தான் கேட்டவற்றை அனுப்பாததால், தாசன் கோபமாக கடிதம் போட்டிருந்தான்.

தேர்தல் முடிவுகள் ஊரில் எந்தப் பாதிப்பையும் ஏற்ப்படுத்தவில்லை. அவர்கள் வழமை போல் தேங்காய் விலையேறி விட்டதாகத் திட்டி, கோவில் திருவிழா சிறப்பாக நடக்க வேண்டுமெனக் கதைக்கப்பட்டு, திருமண வயதில் வீட்டிலிருக்கும் மகளை நினைத்து ஏக்கப்பட்டு.........

வழமை போல் வாழ்ந்தார்கள்.

பாடசாலை விடுமுறை விட்டிருந்தது. பாலன் பெற்றோரிடம் போயிருந்தான். சின்னமணி வேலியோரமிருந்த புற்றில் சாம்பலைக்கொட்டிக் கொண்டிருந்த போது, தெருவில் பலர் பரப்பரப்பாக ஓடிக் கொண்டிருந்தார்கள்.

சாம்பலைக் கொட்டி முடித்தபின் சின்னமணியும் தெருவுக்கு வந்தாள். பலர் அவளை ஒரு மாதிரியாகப் பார்த்தனர், ஏதோ தங்களுக்குள் கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

கூட்டமாக இருந்த இடத்திற்கு சின்னமணி வந்தபோது எல்லோரும் வழி விட்டார்கள்.

ஒரு வருடத்திற்கு முன், சாரதாவின் மகன் சந்திரன் உடல் கிடந்த அதே இடம். அதே பற்றை. இப்போது உடலில் பல பொத்தல்களுடன் ராசன் பரவியிருந்தான்.

சின்னமணி விறைத்து போனாள். அழுகை உடனே வரவில்லை. ரத்த ஓட்டம் நின்று விட்டது போன்ற உணர்வு.

சுற்றி நின்றவர்கள் தங்களது மௌன அஞ்சலியை முடித்து விட்டு, வாயைத் திறந்தபோது சின்னமணி ராசனின் சடலத்தில் விழுந்து புரண்டாள்.

அடிவயிற்றிலிருந்து தாய்ப்பாசம் அழுகையாக வெடித்து கிளம்பியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கூடியிருந்தவர்கள் தங்களது விமர்சனத்தை ஆரம்பித்தார்கள்.

"விடியத்தானும் வாசலிலிருந்து கொண்டு வந்து போட்டவங்கள்".

"சாரதாவின்ர பெரு மகனும் வந்தவங்களில் ஒருவனும்".

"அப்ப சந்திரன்ர கொலைக்கு இப்ப பழி வாங்கியிருக்கிறான்கள்".

"அவங்கள் செய்ததும் சரிதான். இவையின்ர ஆட்டத்திற்கும் முடிவு வேண்டாமே".

"அரசியல் என்டா இப்படித்தான்."

சின்னமணி சடாரென்று நிமிர்ந்தாள். ஒரு வருடத்திற்கு முன்னால் சந்திரன் கொலை செய்யப் பட்ட போது, அதனை நியாயப்படுத்திச் சொல்லப் பட்ட அதே வார்த்தைகள்.

இப்போது ராசனின் கொலைக்கும் அதே வார்த்தைகள்தான். வார்த்தைகள்தான் ஒன்றாகவே இருந்தன. ஆனால் சடலந்தான் மாறியிருந்தது.

சின்னமணி அழுகையை மீறிவந்த ஆத்திரத்துடன் எழுந்த போது, கூடியிருந்த கூட்டம் கரைந்திருந்தது. அவளுடைய அண்ணனின் குடும்பம் மட்டுமே அருகில் நின்றது.

"நாசமாய்ப் போன அரசியல் கோதாரி விழுந்த அரசியல் ஐயோ என்ர பிள்ளையை கொண்டு போட்டாங்களே" என்று சின்னமணி மறுபடி ராசனின் பிணத்தைக் கட்டி பிடித்தும், வயிற்றில் அடித்தும், மண்ணிலே புரண்டும் அழுது கொண்டிருந்த போது.....,

ஊரவர்கள் வழமை போல் தேங்காய் விலையேற்றத்தினாலோகத் திட்டி, கோயில் திருவிழாவிற்காக கவலைப்பட்டு, திருமண வயதில் வீட்டிலிருக்கும் மகளை நினைத்து ஏக்கப்பட்டும் வழமை போல் இயங்கிக் கொண்டிருக்கும் போது......

வேறிடத்தில் சாரதாவின் பெருமகனை சிலர் தீவிரமாக தேடிக் கொண்டிருந்தார்கள்.

www.tamilarangam.net

## அறியப் படாதவர்கள் நினைவாக

மரித்தோரின்நாள்:
கல்லறைத் திருநாள்!
விரிந்துகிடக்கின்ற சவக் காலைக்கதவுகள்
வந்து போனபடி, பெரிய சனக்கூட்டம்.

கல்லறைகள் எழுந்துள்ளன;
வாழ்ந்து சொகுசாக
மறைந்து போனவரின்,
நினைவைக் கல்லுகளில்
வரைந்த அடையாளம்.
பூவெழுத்தில் விவரங்கள்,
'சிலுவை' 'சம்மனசு'
'கன்னிமரியாளாய்ச்'
சுருபங்கள்;
கூலிக் குழைத்த
மேசன் தொழிலாளர் கைவண்ணம்.

தென்கிழக்கு மூலை,
வரிசையாய்க் கல்லறைகள்:
,சங்கைக் குரிய கன்னியர்கள் தந்தையர்கள்'
படுத்துக் கிடக்கிறாராம்;
பளிங்கில் அவர்நினைவு
பொறிக்கப் பட்டுளன.

கிணற்றருகில்
தென்னை மரத்தடியில்,
பட்டிப்பூ மலர்ந்துள்ள

www.tamilarangam.net

சிப்பிச் சிலுவை
மேடுகளின் கீழெல்லாம்
மனிதர் புதைபட்ட, அடையாளம்.
பேரும் தெரியாது,
ஊரும் தெரியாது,
யாரென்றும் அறியப்
படாத மனிதர்கள் இங்கு புதைந்துமுளார்.

யாரென் றறியப் படாதவரென்ருலும்,
அவரைக் குறிப்பாக
உணர முடியுந்தான்......!

'ஒருகரையில்' நின்றபடி
கரைவலையை இழுத்தவர்கள்:
தாமிழுத்தமீனில் சம்மாட்டி கொழுத்திருக்க
மெலிந்து கருவாடாய்க், காய்ந்து மடிந்தவர்கள்...

'அலுப் பாந்தி' அருகில்
முட்டை சுமந்தவர்கள்; பார விறகுவைச்சு
கை வண்டில் இழுத்தவர்கள்...'

'பொழுது புலராத விடி காலைதொடங்கியதும்
நகரை ஊடறுத்த வீதிகளின் வீடுகளில்,
நாளும் அழுக்குகளைக் களைந்துசுமந்தவர்கள்......'

என்ற உழைப்பாளர் தாம்புதைந்து கிடப்பார்கள்!

செத்துப் புதைபட்டுக்
கிடந்த மண்மீதும்
எல்லை கட்டி,
கல்லறையாய் மேடுகளாய்
வர்க்கத்தின் முத்திரைகள்
வர்க்கத்தின் முத்திரைகள்!

அ. யேசுராசா

www.tamilarangam.net

# ஒரு சித்தாந்தம் வரலாற்று உண்மையானது

கே.பி.ராஜ்.

மார்க்சிய சித்தாந்தமானது வரலாற்று நிகழ்ச்சிகளினூடு மீண்டும் மீண்டும் உண்மையென நிரூபிக்கப்பட்டுக்கொண்டு வருகின்றது.

உலகில் எழுதப்பட்ட வரலாறுகள் எல்லாம் வர்க்கங்களுக்கிடையிலான போராட்டங்களின் வரலாறுகளேயாகும்.

அரசு என்பது உற்பத்திச்சாதனங்களை உடமையாக வைத்திருக்கும் ஒரு வர்க்கம் மற்றைய வர்க்கங்களை ஒடுக்குவதற்கும் சுரண்டுவதற்கும் பாவிக்கும் இயந்திரமாகும்.

புரட்சி என்பது ஒடுக்கும் வர்க்கத்தின் கையிலிருக்கும் அரசயந்திரங்களை ஒடுக்கப்படும் வர்க்கம் தன் கைகளில் எடுக்கும் நிகழ்ச்சி. ஆளும் வர்க்கங்கள் சமாதானமாக தமது அதிகாரங்களைக் கையளித்ததாகச் சரித்திரமில்லை. ஆனால்.........

ஒடுக்கப்படும் வர்க்கங்கள் தாம் இனியும் ஒடுக்குமுறையின் கீழ் வாழ முடியாது என்ற நிலமையில் எழுச்சி பெறும் பொழுது...

ஒடுக்கும் வர்க்கங்கள் தம் ஆளுமையை இழந்து அரசயந்திரமே ஆட்டம் காணும் பொழுது..............

புரட்சிக்கான சூழ்நிலமைகள் உருவாகின்றன.

www.tamilarangam.net

ஒரு புரட்சிக்கட்சியின் வழிகாட்டலில் ஒடுக்கப்பட்ட வர்க்கம் அரச இயந்திரங்களைக் கைப்பற்றுகின்றது.... புரட்சி வெற்றிபெறுகின்றது. உலக வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்த ருசியப்புரட்சி இசசித்தாந்தங்களையெல்லாம் வரலாற்று உண்மைகளாக்கியது.

ரஷ்யப் புரட்சி

ருசிய நாட்டின் மன்னனான சார் இரண்டாவது நிக்கலொசின் சம்ராஜயம் மேற்கே ஐரோப்பிய யூரல்மலைகளிலிருந்து கிழக்கே ஆசியாக்கண்டத்தின் சைபீரியா வரை பரந்திருந்தது. 19ம் நூற்றாண்டின் இறுதிப்பகுதிகளில் இந்த நாடு முற்றிலும் விவசாயத்திலேயே தங்கியிருந்தது. 10 இலட்சம் நிலப்பிரபுக்களுக்குச் சொந்தமான நிலங்களில் 970 இலட்சம் மக்கள் விவசாயத்தில் ஈடுபட்டிருந்தனர். 1861ம் ஆண்டு ஏற்பட்ட நிலச்சீர்திருத்தங்களுக்கு முன்பு பெரும்பான்மையான விவசாயிகள் நிலஅடிமைகளாகவே இருந்தனர்.
1861 இல் ஏற்பட்ட நிலச்சீர்திருத்தங்களின்படி விவசாயத்திற்கு தகுதியற்ற நிலங்கள் நிலஅடிமைகளுக்குப் பகிர்ந்து கொடுக்கப்பட்டன. இந்த நிலங்களுக்கான நட்டஈட்டை அரசாங்கம் நிலப்பிரபுக்களுக்குக் கொடுத்தது. ஆனால் இந்தப்பணத்தை இந்த நிலங்களை கூட்டுறவு (கொமியூன்) முறையில் விவசாயம் செய்த மக்களிடமிருந்து அறவிட்டது. இதனால் நிலச் சீர்திருத்தம் ஏற்பட்ட போதியும் விவசாயிகள் தமது உழைப்பால் பெற்ற பணத்தின் பெரும் பகுதியை நட்டஈட்டிற்கும் வரியாகவும் கொடுக்க வேண்டியேற்பட்டதால் தொடர்ந்தும் வறுமையிலேயே வாழ்ந்து வந்தனர். இதே சம

www.tamilarangam.net

யத்தில் செல்வந்தராக இருந்த விவசாயிகள் நிலப்பிரபுக்களின் செழிப்பான நிலங்களை விலைக்கு வாங்கியும், குத்தகைக்கெடுத்தும் தமது செல்வத்தைப் பெருக்கிக் கொண்டனர். ஆனால் ஏழை விவசாயிகளின் நிலத்தேவைகள் பூர்த்திசெய்யப்படாமலே இருந்தன. புத்திஜீவிகளையும் வியாபாரிகளையும் கொண்ட மத்தியதரவர்க்கத்தினர் சிறுதொகையினராகவே இருந்தனர்.

19ம் நூற்றாண்டில் ருசியாவில் தொழில் வளர்ச்சி ஏற்படஆரம்பித்தது. 1875 – 1913 காலத்தில் நிலக்கரி உற்பத்தி 14மடங்காக வும், இரும்பு உற்பத்தி 9 மடங்காகவும், எண்ணெய்உற்பத்தி 5மடங்காகவும் அதிகரித்தது. 20,000இலட்சம் ரூபிள் வெளிநாட்டு மூலதனம் ருசியாவில் இருந்தது. தொழிலாளர்களின் தொகை 30 லட்சமாக வளர்ந்தது. ஆனால் இது ருசியாவின் முழுச்சனத்தொகையுடன் ஒப்பிடும் பொழுது ஒரு சிறிய பங்காகவே இருந்தது. தொழில்கள் அதிக மனித உழைப்பை அடிப்படையாகக்கொண்ட தொழில்களாகவே அமைந்திருந்தன. அதிகமான தொழிலாளர்கள் சுரங்கங்களிலேயே வேலைசெய்தார்கள். அவர்கள் 11 – 12 மணித்தியாலங்கள் வேலைசெய்தார்கள். எந்தவிதமான ஆரோக்கிய வசதிகளோ அல்லது குடியிருப்புவசதிகளோ அவர்களுக்கு இருக்கவில்லை. தொழிற்சங்கங்கள் அமைப்பதும் வேலைநிறுத்தம் செய்வதும் சட்டவிரோதமாக்கப்பட்டிருந்தது. ருசியாவில் மேற்கு ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டிருந்தது போல தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருந்தாலும் அங்கு ஏற்படடிருந்த முதலாளித்துவ அரசியல் மாற்

www.tamilarangam.net

றங்கள் ஏற்படவில்லை. ருசியாவில் ஒரு நிலப்பிரபுத்துவ மன்னர் ஆட்சியே நடைபெற்றுக் கொண்டிருந்தது.

ராணுவமும், பொலிசாரும், கிறிஸ்தவ மடங்களும், நிலப்பிரபுக்களும் இந்த அரசிற்குப் பாதுகாப்பாக விளங்கினர்.

இந்தக் காலங்களில் ஏற்பட்ட அரசியல் இயக்கங்கள் எல்லாம் இரகசிய இயக்கங்களாகவே இருந்தன. சார் மன்னனின் பொலிசாரின் கெடுபிடிகளினால் எந்தவிதமான அரசியல் விமர்சனங்களையும் பகிரங்கமாகச் செய்ய முடியாமலிருந்தது. மேலும் இந்த அரசியல் கருத்துக்கள் கற்பனாவாதங்களாகவோ அல்லது அதிதீவிரமானவைகளாகவோ இருந்தன. ஆரம்ப காலங்களில் ருசியாவில் இரண்டு விதமான அரசியல் கருத்துக்கள் நிலவின.

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டது போன்ற தொழில் வளர்ச்சியையும் பாராளுமன்ற அரசியல் வளர்ச்சியையும் ருசியாவில் உருவாக்க வேண்டுமென்பது முதலாவது கருத்தாகும்.

ருசியா தனித்தன்மைவாய்ந்த ஒரு விவசாய நாடு. அதன் கிராம 'கமியூன்' (கூட்டுறவு) விவசாயப் பொருளாதார அடிப்படையில் ஒரு சோசலிச சமுதாயத்தை உருவாக்க முடியுமென்பது இரண்டாவது கருத்தாகும். இந்தக கருத்திற்கு குரல் கொடுத்தவர்களில் முக்கியமானவர் அலக்ஸாண்டர் கேர்சன் என்பவராகும். இவர் "பெல்" என்ற ஒரு பத்திரிகையை நடத்தியதுடன் கிராமவிவசாயிகளிடம் நம்பிக்கை கொண்ட ஒரு "பொப்பியுலிச" இயக்கத்தையும் உருவாக்கினர். இக்கருத்துக்கள் சர்வகலாசாலை மாணவர்கள் மத்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யில் செல்வாக்குப் பெற்றிருந்தன. ஒழுக்கசீலர்களாகவும் கட்டுப்பாடுடையவர்களுமான புரட்சியாளர்களைக் கொண்ட புரட்சிகர குழுக்களினாலேயே புரட்சியைச் செய்ய முடியுமென இவர்கள் நம்பினார்கள். தாங்கள் மிகுந்த கட்டுப்பாட்டுடன்இருப்பதாகக் கூறிய இவர்கள், மற்றவர்களிடம் மிகுந்த கடுமையாக நடந்து கொண்டார்கள். 1874 இல் இக் கருத்துக்களால் கவரப்பட்ட சர்வகலாசாலை மாணவர்கள் தம்மை "நார்தோனிக்" (மக்களுக்கான மனிதர்கள் ) எனக் கூறிக் கொண்டு விவசாயிகள் மத்தியில் புரட்சிக்காக வேலை செய்வதற்காகக் கிராமங்களுக்குச் சென்றார்கள். ஆனால் இவர்களுக்கு ஏற்பட்டது ஏமாற்றம்தான்.

"நார்தோனிக்"குகள் கற்பனை செய்த விவசாயிகளை அவர்கள் கிராமங்களில் காணவில்லை; சாதாரண விவசாயிகள் இந்த நகரப் பகுதி மாணவர்களையும் அவர்களின் போதனைகளையும் நோக்கங்களையும் சந்தேகக் கண்களுடனேயே பார்த்தனர். இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்ட பலர் அரசாங்கப் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டனர். மிகுதியாக இருந்தவர்கள் 1876 ம் ஆண்டு "நிலத்திற்கும் விடுதலைக்குமான" ஒரு இயக்கத்தை ஆரம்பித்தனர். இவர்களில் முக்கியமானவர் ஜோர்ஜ் பெலக்கநோவ் என்பவர். இந்த அமைப்பின் முக்கிய நோக்கம் ஒரு ஆயுதப்புரட்சியின் மூலம் நிலங்களைச் சுவீகரித்து விவசாயிகளுக்குப் பகிர்ந்து கொடுப்பதேயாகும். இந்த அமைப்புக்குள் இருந்த தீவிரவாதிகள் தனிநபர் பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட ஆரம்பித்ததினால் இந்த அமைப்பில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிளவு ஏற்பட்டது. சிறு குழுக்களினால் செய்யப்படும் தனிநபர்பயங்க ரவாதச் செயல்களே "புரட்சிகர நடவடிக்கைகள்" எனத்தீவிர வாதிகள் நம்பினர்கள். 1879-ல் நடைபெற்ற இவர்களுடைய இர கசிய மகாநாட்டில் ஜோர்ஜ் பெலக்கநொவும், போல் அக்சல் ரொட் என்பவரும் இக்கருத்துக்களுடன் முரண்பட்டு இயக்கத்திலிருந் -து வெளியேறினர்கள். பெரும்பான்மையாக இருந்த தீவிரவாதிகள் "மக்களின் அபிலாசைகள்" எனத்தமது இயக்கத்திற்குப் பெயரிட்டு க்கொண்டு தனிநபர் பயங்கரவாதச்செயல்களைத் தொடர்ந்தனர். அடுத்த சில ஆண்டுகளில் இவர்கள் பல அரசியல் கொலைகளைச் செய்தனர். 1881-ம ஆண்டு இரண்டாவது அலக்ஸசாண்டர் மன்ன னும் கொலை செய்யப்பட்டான்.

இக்குழுவினரிடமிருந்து பிரிந்த ஜோர்ஜ் பெலக்கநொவும், போல் அக்சல்ரொட்டும் சுவிற்சலாந்து சென்று ஜெனிவா நகரில் வாழ்ந்-து வந்தனர். விவசாயிகளின் புரட்சியிலும், பொப்பியூலிசவாதத்திலும் நம்பிக்கையிழந்த இவர்கள் சமுதாயப்பிரச்சனைகளை விஞ்ஞான ரீதியாக அணுகுவதற்கு உதவும் மார்க்சீயத்தின்பால் தமது கவ-னத்தைச் செலுத்த ஆரம்பித்தனர். ருசியாவில் சமுதாய மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய வர்க்கம் அங்கு வளர்ந்துவரும் தொழிலாளவர் க்கம்தான் என்ற முடிவுக்கு வந்தார்கள். 1883இல் 'தொழிலாளர் களின் விடுதலைக்கான குழு' என்ற இயக்கத்தை ஆரம்பித்தார்கள்.

மேற்கு ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டது போல ருசியாவிலும் முதலாளித்துவப்புரட்சி ஏற்படுமெனவும் அதன் பின்பு தொழிலாள



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வர்க்கத்தின் சோசலிசப்புரட்சி சாத்தியமாகலாமெனவும், இதைக் கருத்திற்கொண்டு செயற்பட வேண்டுமென ஜோர்ஜ் பெலக்கனோவ் நம்பினார்.

1881-ம் ஆண்டு ருசியாவிலிருந்த பொபியுலிசவாதிகளுக்கு எதிராக எழுதிய மார்க்ஸ் 'ருசியாவில் ஏற்பட்டுவந்த புரட்சிகர மாற்றங்களினால் ஒரு சோசலிசப்புரட்சி நடைபெறலாமெனவும், அதை சுற்றியுள்ள நாடுகளில் ஏற்படும் புரட்சிகரமாற்றங்களினாலேயே பாதுகாக்கவும் முடியும்' எனக் குறிப்பிட்டுள்ளதை ஜோர்ஜ் பெலக்னோவ் கருத்தில் கொள்ளவில்லை. வரலாறு மார்க்ஸின் கருத்து சரியென நிருபித்தது.

ஜோர்ஜ் பெலக்கனோவ் "ருசிய மார்க்சியத்தின் தந்தை" என வரலாற்றில் குறிப்பிடப்படுகின்றார். இவர்களின் முயற்சியால் ருசியாவின் தொழில் வளர்ச்சி பெற்ற நகரங்களில் மார்க்சீய சமூகஜனநாயக வட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டன. இதன் விளைவாக ருசிய சமூக ஜனநாயகக்கட்சி உருவாக்கப்பட்டு அதன் முதலாவது மகாநாடு மின்ஸ்க் நகரில் 1898-ம் ஆண்டு நடைபெற்றது.

## 20-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ருசியாவிலிருந்த அரசியற்குழுக்கள்.

இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் ருசியாவில் ஏற்பட்ட அரசியல் வளர்ச்சியினால் மாணவர்களின் ஆர்ப்பாட்டங்களும், தொழிலாளர்களின் வேலைநிறுத்தங்களும், விவசாயிகளின் கிளர்ச்சிகளும் சார்மன்னனின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சர்வாதிகார ஆட்சிக்கெதிராக இடம்பெற்றன. இக்காலத்தில் வளர்ச்சியடைந்திருந்த அரசியற்குழுக்களை மிதவாதிகள், சமூகப் புரட்சியாளர்கள், சமூகஜனநாயகவாதிகள் என மூன்று பகுதியினராக பிரிக்கலாம்.

மிதவாதிகள்.

ருசியாவிலிருந்த மன்னரின் சர்வதிகார ஆட்சிமுறையை, ஜனநாயக சுதந்திரங்களை வென்றெடுப்பதன் மூலமும், சட்டரீதியான சீர்திருத்தங்களை செய்வதன் மூலமும் மாற்றியமைக்க முடியுமென இந்த மிதவாதிகள் நம்பினார்கள். இங்கிலாந்திலிருந்தது போல மன்னரின் தலைமையில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பாராளுமன்ற ஆட்சி முறையே போதுமானது என்ற கருத்துடையவர்களாக இருந்தார்கள். ருசியாவின் முதலாளித்துவப்புரட்சியை முன்னெடுக்கக்கூடிய அரசியலை கொண்டிருந்த இவர்கள் அன்றிருந்த நிலப்பிரபுத்துவ அரசைனு க்கி எறியக்கூடிய சக்திவாய்ந்தவர்களாக இருக்கவில்லை.

மிதவாதிகளின் ஜனநாயகத்திற்கான கருத்துக்கள் கூட சார்மன்னனின் ஆட்சியில் சட்டவிரோத நடவடிக்கைகளாகக் கருதப்பட்டன.

சமூகப்புரட்சிவாதிகள்:

பனியுறைந்த சைபீரியாக் காடுகளுக்கு நாடுகடத்தப்பட்டிருந்த "மக்களின் அபிலாசைகள்" என்ற பொப்பியுலிச இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் 1896இல் நகரங்களுக்குத் திரும்பி 'சமூகப்புரட்சிவாதிகள்' என்ற பொப்பியுலிச அமைப்பை உருவாக்கினர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

1901 -ம் ஆண்டு இந்த அமைப்பின் தலைவரான விக்டர் சேர்னவ் ஜேர்மனியில் பேர்லின் நகரில் இருந்து கொண்டு ருசியாவில் தனி நபர் பயங்கரவாத நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கான திட்டங்களைத் தீட்டிக் கொண்டிருந்தான். அதற்கு அடுத்த வருடம் இவர்கள் தங்கள் பத்திரிகை மூலம் ருசியாவில் பிரசாரங்களை ஆரம்பித்தது டன், ஜெனிவாவில் தமது இயக்கத்தை ஒரு அரசியல் கட்சியாகவும் பிரகடனப்படுத்தினர். 1903ம் ஆண்டு சமூகப்புரட்சிவாதிகள் இரண்டாவது அகிலத்தின் காங்கிரசுக்கும் அழைக்கப்பட்டனர். 1906ம் ஆண்டு இவர்கள் தமது அரசியல் திட்டத்தையும் வெளியிட்டார்கள். ருசியாவில் சோசலிச சமுதாயத்தை உருவாக்குவதே தமது முக்கிய குறிகோள் என அரசியல் திட்டத்தில் குறிப்பிட்டார்கள். அதன் குறைந்தபட்சக் கோரிக்கையாக ருசிய சமஷ்டிக்குடியரசை அமைப்பதற்கான அரசியலமைப்புச்சபை கூட்டப்பட வேண்டுமென்றும், அரசுக்கும் கிறிஸ்தவமடாலயங்களுக்கும் இருந்த உறவுகள் துண்டிக்கப்பட வேண்டுமெனவும் குறிப்பிட்டார்கள்.

இவர்கள் சமுதாயத்தில் அதிருப்தியுற்றிருந்த சகல பகுதியினரையும் உள்ளடக்கிய பரந்த அரசியல் கட்சியை உருவாக்க விரும்பினார்கள். மார்க்சிய சித்தாந்தத்தில் அவர்கள் நம்பிக்கை கொண்டிருக்கவில்லை. அவர்களுடைய பொப்பியுலிசப் பாரம்பரியத்திலே அவர்களுக்கு வர்க்கப் போராட்டத்திலேயோ அல்லது தொழிலாளர்களை அணிவகுப்பதிலோ அக்கறையிருக்கவில்லை. நிலங்களை நட்டஈடு கொடுக்கமால் சுவீகரித்து விவசாயிகளுக்குப் பகிர்ந்து கொடுத்து கூட்டுறவு முறையில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விவசாயப்பொருளாதாரத்தை வளர்ப்பதே அவர்களின் வேலைத்திட்டமாக இருந்தது.

போராட்டத்தந்திரோபாயமாக இவர்கள் தனிநபர் பயங்கரவாதத்தில் நம்பிக்கை வைத்திருந்தனர். இந்தக்கால கட்டத்தில் இவர்களுக்கு மக்கள் மத்தியில் பெருமளவில் ஆதரவு காணப்பட்டது. மார்க்சியசித்தாந்தவாதிகள் கூறியபிரகாரம் ஒரு சோசலிசப்புரட்சி ஏற்படமுடியுமென பலரும் நம்பமறுத்தனர். மேலும் சோசலிசத்தில் அதிக நம்பிக்கையில்லாவிட்டாலும் பொப்பியுலிச சமூகப்புரட்சிவாதிகள் உடனடியாகப்புரட்சி வருவதாகக் கூறியபடியால் சீக்கிரத்தில் தமக்கு நிலம் சொந்தமாகிவிடும் என்ற நம்பிக்கையில் விவசாயிகள் அவர்களை ஆதரித்தார்கள்.

சமூக ஜனநாயகவாதிகள் ( பொல்சிவிக் - மென்சிவிக் )

ருசியாவின் மர்க்சியத்தின் தந்தையான ஜோர்ஜ் பெலக்கநோவியால் உருவாக்கப்பட்ட சமூக ஜனநாயகவாதிகள் மார்க்சிய சித்தாந்தத்தில் அசையாத நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தார்கள். ருசியாவின் சமுதாய மாற்றத்திற்கு தொழிலாளவர்க்கம் இன்றியமையாதது என அவர்கள் கருதினார்கள். சமூகப்புரட்சிவாதிகளின் கொள்கைகளுடன் இவர்கள் பெரிதும் முரண்பட்டார்கள். விவசாயிகளுக்கு நிலங்களைப்பிரித்துக் கொடுப்பது இறுதியில் ஒரு சில பணக்காரவிவசாயிகளை உருவாக்குவதிலேயே முடியுமென அவர்கள் நம்பினார்கள். நிலங்கள் தேசியமயமாக்கப்பட வேண்டுமென்ற கொள்கையை இவர்கள் முன்வைத்தார்கள். வர்க்கப்போராட்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டத்தின் விளைவாக ஏற்படும் சமுதாயப்புரட்சிக்கு தனிநபர்பயங்க ரவாதம் அவசியமற்றது என சமூகஜனநாயகவாதிகள் கருதினர்கள் 19ம் நூற்றாண்டின் நார்தோனிக்-பொப்பியூலிச வாதத்திற்கு சமூக ப்புரட்சிவாதிகள் புதுமுகம் கொடுத்துக் கொண்டிருந்த வேளையில் சமூகஜனநாயகவாதிகள் மத்தியில் புதிய சித்தாந்தக்குழப்பங்கள் ஏற்பட்டுக் கொண்டிருந்தன.

1899 இல் ஜேர்மனியில் உள்ள சமூகஜனநாயகக்கட்சியைச் சேர்ந் -த எட்வேர்ட் பெணர்ஸ்டைன் என்பவர், தொழிலாளவர்க்கம் தொழிற்சங்கப் போராட்டங்களிலும், பாராளுமன்ற அரசியலிலும்மட்டுமே பங்குகொள்ள வேண்டுமென்ற திரிபுவாதக் கருத்துக்களை வெளியிட்டுக் கொண்டிருந்தார். இக்கருத்துக்களின் தாக்கங்களை ருசிய சமூகஜன நாயகக்கட்சியுள்ளும் காணக்கூடியதாக இருந்தது. பொருளாதார வாதிகள் என அழைக்கப்பட்ட குழுவினர், தொழிற்சங்க நடவடிக் கைகளில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டுமெனவும் அரசியலில் மிதவாதிகளை ஆதரிக்க வேண்டுமென்ற கருத்துக்களை வெளியிட்டன -ர். இக்கருத்துக்களுடன் ஜெனிவாவில் வாழ்ந்து கொண்டிருந்த ஜோர்ஜ் பெலக்கநோவ் பெரிதும் முரண்பட்டார். தொழிற்சங்கப் போராட்டங்களில் மட்டும் பங்கு கொள்வது தொழிலாளவர்க்கத் தின் போராட்டத் தன்மையினை மாற்றிவிடுமென அவர் கருதினார். இவரின் இக்கருத்துக்களை இளம் சமூகஜனநாயகவாதிகள் ஆதரித்த தார்கள். இவர்களில் முக்கியமானவர் வல்டிமிர் இலிச உலேநோவ் என்ற இளைஞராவார்.

www.tamilarangam.net

## லெனினும் மார்ரொவும்.

வல்டிமிர் இலிச் உலேனொவ் 1870ம் ஆண்டு வொல்கா நதிப்பிர தேசத்தில் ஒரு பாடசாலைப் பரிசோதகரின் மகனாகப்பிறந்தார். இவரது குடும்பத்தினர் பொப்பியிலிச வாதத்தினால் பெரிதும் கவரப்பட்டவர்களாக இருந்தார்கள். 1887இல் இவருடைய மூத்த சகோதரர் அலக்சான்டர், சார்மன்னனை மூன்றாவது அலக்சான்டரைக் கொலை முயற்சித்ததற்காக தூக்கிலிடப்பட்டார். பொப்பியிலிச வாதத்தை விட்டு மார்க்சியப் புத்தகங்களைப் படிக்க ஆரம்பித்த இவர் 1893ம் ஆண்டில் ருசிய நாட்டின் தலைநகரமான சென். பிடேர்ஸ்பேர்க்கில் சமூகஜநாயக இயக்கத்தின் இரகசிய நடவடிக்கைகளில் ஈடுபட ஆரம்பித்தார். இரகசிய இயக்கத்தில் இவர் பாவித்த பெயர் வி. ஐ. லெனின்.

1895ம் ஆண்டு, தனது மார்க்சிய நம்பிக்கைகளுக்காகச் சிறையிலிருந்த ஜூலியஸ் ரசேடர்பவும் என்ற இளைஞர் லெனினைச் சந்தித்தார். இவருடைய இயக்கப் பெயர் மார்ரொவ். இவர்கள் இருவருமாக இணைந்து 'தொழிலாளர்களின் விடுதலைக்கான குழு'வை சென். பிடேர்ஸ்பேர்க்கில் அமைத்தார்கள். ஆனால் ஒரு ஆண்டு செல்வதற்கு முன்னமே இருவரும் கைது செய்யப்பட்டு சைபீரியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். சைபீரியாவிலும் இவர்கள் தங்களது மார்க்சியப் படிப்புக்களைத் தொடர்ந்தனர். லெனின், "ருசியாவில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி" என்ற நூலை அப்போதுதான் எழுதினார்.

## தீப்பொறி.

1900ம் ஆண்டு விடுதலையடைந்த லெனின் பெலக்கனொவைச் சந்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திக்கு ஜெனிவாக்குச் சென்றார். ருசியாவில் மார்க்சியக் கருத்துக்க ளைப் பரப்புவதற்கு "இஸ்கிரா" (தீப்பொறி) என்ற பத்திரிகை யை வெளிக் கொண்டுவருவது எனத் தீர்மானிக்கப் பட்டது. 1901ம் ஆண்டு ஆறு பேர்களைக் கொண்ட ஆசிரியர் குழு உருவாக்கப்பட்ட -து. பெலக்கனேவ், அக்சல்ரொட், வேரா சுசலிச், லெனின், மாரரொவ், பெட்றெசெவ் ஆகியோர் இக்குழுவில் அங்கம் வகித் தார்கள். இளம் தலைமுறையினராகிய லெனின், மாரரொவ், பெட்-றெசவ் ஆகியோர் லண்டனுக்கு தமது வசிப்பிடங்களை மாற்றிக் கொண்டு அங்கிருந்து செயற்பட ஆரம்பித்தார்கள். இங்குதான் சைபீரியாச் சிறைச்சாலையிலிருந்து தப்பியோடி வந்த லியோன் பொறன்ஸ்ரயின் (இயக்கப் பெயர் - லியோன் ரொட்ஸ்கி ) 1902 இல் லெனினை முதல் முறையாகச் சந்தித்தார்.


என்ன செய்ய வேண்டும்?

இக்காலத்திலேயே லெனின் பொருளாதாரவாதிகளுக்கெதிரான தனது விமர்சனத்தை "என்ன செய்ய வேண்டும்?" என்ற நூலாக வெளியிட்டார்.

தொழிலாளர்களின் வர்க்கப்போராட்ட உணர்வுகள் எப்போதும் ஒரேமட்டத்தில் இருப்பதில்லை. இந்த வர்க்கத்தின் மூளையாகவும், இருதயமாகவும் இயங்குகின்ற புரட்சிக்கட்சி, அவர்களைப் போரா ட்டப் பாதையில் இட்டுச் செல்வதற்கு அவசியமாகும். இக்கட்சியின் அங்கத்தவர்களுக்குப் பூரணமான சித்தாந்த அறிவூட்டவேண்டியது அவசியமாகும். வெகுஜனங்களை அணிதிரட்டக்கூடிய கோசங்களையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்




ருசியாவும் அதைச் சூழ்ந்த நாடுகளும்.

அவர்கள் அறிந்திருக்க வேண்டும். ஒரு புரட்சிக்கட்சியுள் பூரணமான கருத்துப்பரிமாறல்கள் இடம்பெற வேண்டும். கட்சித் தீர்மானங்களைச் சகல அங்கத்தவர்களும் கடைப்பிடிக்கவேண்டும். சமூகஜனநாயகக் கட்சியிலுள்ளவர்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை லெனின் இவ்வாறு விளக்கினார்.

1903ம் ஆண்டு சமூகஜனநாயகவாதிகளின் இரண்டாவது மகாநாடு பெல்ஜியத்திலுள்ள பிரசல்ஸ் நகரில் ஆரம்பித்து, பொலிஸ் கெடுபிடிகளினால் லண்டனில் தொடர்ந்து நடைபெற்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## போல்சிவிக்குகளும் மென்சிவிக்குகளும்.

இந்த மகாநாட்டிற்குச் சமூகமளித்த 43 பேராளர்களில் 'இஸ்கிரா' குழுவினரே பெரும்பான்மையினராக இருந்தனர். பொருளாதார தொழிற்சங்கவாதிகள், யூததொழிற்சங்கத்தினர் ஆகிய சிறுபான்மைக்குழுக்களும் கலந்து கொண்டன.

இந்த மகாநாட்டில் ஒரு புரட்சிக்கட்சியின் அங்கத்தவராக இருக்கக்கூடியவரின் தகமை பற்றி விவாதிக்கப்பட்டது. 'ஒரு புரட்சிக்கட்சியின் அங்கத்தவர் சந்தாப்பணம் முதலியவற்றைச் செலுத்திப் பொருளாதார ரீதியாக கட்சியை ஆதரிப்பதுடன் அதன் அமைப்புகளிலும் வேலைசெய்யவேண்டுமென்று' தீர்மானத்தை லெனின் முன் வைத்தார்.

ஒரு புரட்சிக்கட்சியின் அங்கத்தவர் சந்தாப்பணம் முதலியவற்றைச் செலுத்திப் பொருளாதார ரீதியாக ஆதரிப்பதுடன் அதன் அமைப்புகளுடன் ஒத்துழைக்கவும் வேண்டும்' என்ற தீர்மானத்தை மாரரொவ் முன்வைத்தார். அரசியலுக்காக தமது முழுநேரத்தையும் அர்ப்பணிக்கக்கூடியவர்களைக் கொண்ட புரட்சிக்கட்சியை உருவாக்குவது லெனினின் நோக்கமாக இருந்தது. ஒரு பரந்த மக்கள் கட்சியை உருவாக்குவது மாரரொவின் நோக்கமாக இருந்தது.

தீர்மானங்கள் மீது வாக்கெடுப்பு நடத்தப்பட்ட போது லெனினின் தீர்மானம் தோல்வியடைந்தது. ஆனால் மகாநாடு முடிவடைவதற்குள், விமர்சனத்துள்ளான பொருளாதாரவாதிகளும் யூததொழிற்சங்கத்தினரும் வெளிநடப்புச் செய்தனர். இதனால் லெனினை ஆதரித்தவர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெரும்பான்மையினராகினர். இவர்கள் பொல்சிவிக்குகள் என அழைக்கப்பட்டனர். சிறுபான்மையினர் மென்சிவிக்குகள் (சிறுபான்மை) என அழைக்கப்பட்டனர்.

'இஸ்கரா' (தீப்பொறி) ஆசிரியர் குழுவிற்கு பெலக்கனோவ், மார்ரொவ், லெனின் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். ருசியாவில் இயங்க மூன்று பேரைக்கொண்ட மத்திய குழுவும் தெரிவு செய்யப்பட்டது. மிகவும் கரசாரமான விவாதங்களுடனேயே மகாநாடு முடிவுற்றது.

மாரரொவ் இஸ்கரா ஆசிரியகுழுவில் செயற்பட மறுத்தார். சிறிது காலத்திற்குப் பின்பு பெலக்கனோவ் பழய 'இஸ்கரா' அங்கத்தவர்களை ஆசிரியகுழுவுக்குள் கொண்டுவந்ததால் லெனின் ஆசிரியர் குழுவிலிருந்து விலகினார். இவ்வாறு சமூகஜனநாயகவாதிகள் வாதப்பிரதிவாதங்களில் ஈடுபட்டுக் கொண்டிருக்கையில், 1905இல் முதலாவது ருசியப்புரட்சி வெடித்தது.

இரத்த ஞாயிறு.
---------

1904 இல் ஜப்பானுடன் ஏற்பட்ட போரின் விளைவாக ருசியாவில் அமைதியின்மை நிலவியது. இந்தப் போர்க்கால சூழ்நிலைமைகளைப் பாவித்த மிதவாதிகள் பாராளுமன்ற ஆட்சிமுறையேற்பட வேண்டுமெனக்கோரிக்கை விடுத்தனர். இதே சமயம் சமூகப்புரட்சிவாதிகளின் தனிநபர்பயங்கரவாதம் தொடர்ந்தது.

1905ம் ஆண்டு ஜனவரி மாதம் 9ம் திகதி ஞாயிற்றுக்கிழமை, அரச அதிகாரிகளின் ஆதரவுடன் பீட்டேர்ஸ்பேர்க்கில் தொழிற்சங்கம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நடத்திவந்த கெப்பன் என்ற பாதிரியார் ,அரசியலமைப்புச்சபை கூட்டப்பட வேண்டுமென்ற கோரிக்கையடங்கிய மனுவொன்றை சார் மன்னருக்குக் கொடுப்பதற்காக தொழிலாளர்களும் மக்களுமடங்கிய ஊர்வலமொன்றை விண்டர்ப்பேலசுக்கு (அரசமாளிகை) இட்டுச் சென்றார். இந்தச் சமாதான ஊர்வலத்தின் மீது சார்மன்னனின் காவல் படையினர் துப்பாக்கிப்பிரயோகம் செய்ததால் நூற்றுக்கும் மேலானோர் கொல்லப்பட்டனர். இதைத் தொடர்ந்து சென். பீட்டர்ஸ்பேர்க்கில் ஒரு பொது வேலைநிறுத்தம் ஆரம்பமாகியது. இதைத்தொடர்ந்து பல அரச அதிகாரிகள் கொல்லப்பட்டார்கள். மொஸ்கோவின் கவர்னராக இருந்த சார் மன்னனின் மாமனும் கொல்லப்பட்டான். பெப்ரவரி 18ம் திகதி சார் நிக்கலஸ் மன்னன் ஒரு ஆலோசனைசபை அமைப்பதற்கு மிதவாதிகளுக்குச் சம்மதம் தெரிவித்தான்.

வசந்தகாலத்தில் ஆரம்பித்த விவசாயிகளின் கிளர்ச்சிகள் கோடை காலம் வரை தொடர்ந்தது. இந்தச் சந்தர்ப்பத்தைப் பாவித்த சமூகப்புரட்சிவாதிகள் ஒரு தேசிய மகாநாட்டைக்கூட்டினார்கள். ஜூன் மாதத்தில் ஒடெசா என்ற இடத்தில் 'பொடெம்கின்' என்ற சண்டைக்கப்பலைக் கைப்பற்றிய மாலுமிகள் அதை ருமேனியாவிற்குக் கடத்திச் சென்றார்கள். பல்வேறு நகரங்களிலும் தொழிலாளர்கள் தொழிற்சங்கங்களை அமைத்தனர். சர்வகலாசாலை மாணவர்கள் தமது விரிவுரைமண்டபங்களில் தொடர்ச்சியான அரசியற்கூட்டங்களை நடத்தினார்கள். இதைப்பின்னணியில் பல நகரங்களிலுமுள்ள 'செம்ஸ்டோ' (முனிசிப்பல்) அங்கத்தவர்கள் கூடி ஆலோச



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

னைசபையிலும் பார்க்கக்கூடிய அதிகாரமுள்ள பிரதிநிதிகள் சபை வேண்டுமென்று அறிக்கை வெளியிட்டனர்.

தொழிலாளர் சோவியத்துக்கள்:

ஒக்டோபர் 8ம் திகதி, புகையிரத வேலைநிறுத்தமொன்று ஆரம்பிக்கப்பட்டது.இதைத் தொடர்ந்து பல நகரங்களிலும் பொது வேலைநிறுத்தங்கள் ஆரம்பமாகின. அந்த நாட்களுக்குப் பின்பு செனட்.பிடேர்ஸ்பேர்க்கில் தொழிலாளர்களின்பிரதிநிதிகள் சபை (சோவியத்) உருவாக்கப்பட்டது.ஒக்டோபர் 17ம் திகதி இந்தச்சபை ஒரு செயற்குழுவைத் தெரிவுசெய்ததுடன் குறுஸ்ரெலேவ் -நொசார் தலைவாரகவும், லியோன் ரொட்ஸ்கி உபதலைவரா கவும் தெரிவு செய்யப்பட்டார்கள்.இச் சபை தொழிலாளர்களின் கோரிக்கைகளை வலியுறுத்தியதுடன் நகரத்தின் பாராளுமன்றமாக வும் இயங்கியது.இதுபோன்று மற்றைய நகரங்களிலும் தொழிலாள-ர்சோவியத்துக்கள் அமைக்கப்பட்டன.

இந்த நிலமைகளில் புரட்சியின் வேகத்தை குறைக்கும் நோக்கத்து-டன் சார் நிக்கலொஸ் மன்னன் மேலும் பல சலுகைகளை அளிக்க முன்வந்தான். கவுண்ட் விற்ற என்னும் சீர்திருத்தவாதியை பிரதமமந்தி ரியாக நியமித்தான். சகல அரசியற் கைதிகளுக்கும் மன்னிப்பளிப்ப தாக உறுதியளித்தான். மக்களால் தெரிவுசெய்யப்பட்ட "டுமா" என்ற பிரதிநிதிகள் சபை ஒன்றும் உருவாக்கப்படுமென்றும் அதன் ஆலோசனைகளுடனேயே சட்டங்கள் இயற்றப்படுமென்றும் அறிவித் தான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மிதவாதிகளை இந்தச்சலுகைகள் எந்தவிதத்திலும் திருப்திப்படுத்தா விட்டாலும் ஒரு பிரதிநிதிகள் சபைக்கான ஆரம்பங்கள் ஏற்படுவதா -க நம்பினார்கள். இவ்வாறான நம்பிக்கைகள் செண்ட் பீட்டர்ஸ்பேர்-கிலிருந்த தொழிலாளர்கள் மத்தியிலும் ஏற்படலாயிற்று. நவம்பர் மாதத்தில் விவசாயிகளைத் திருப்திப்படுத்தும் நோக்கத்துடன் அவர்களின் நிலங்களுக்காக அவர்களிடமிருந்து அறவிடப்பட்டு வந்த நட்டஈட்டுவரி ரத்துச் செய்யப்பட்டது.

இந்தநிலைமைகளுடன் கிழக்காசியாவில் ருசியாவுக்கும் ஜப்பானுக்கும் இடையிலான போரில் சிறிது ஓய்வும் ஏற்பட்டதனால் பிரதம மந்திரி விற்ற, தொழிலாளர் சோவியத்திலுடைய அதிகாரங்களைக்கட்டுப்ப டுத்த ஆரம்பித்தான். சோவியத் செயற்குழு அங்கத்தவர்கள் கைது செய்யப்பட்டார்கள். இதைத் தொடர்ந்து மொஸ்கோவிலும் மற்-றைய நகரங்களிலும் ஏற்பட்ட கிளர்ச்சிகள் ஆயுதரீதியாக ஒடுக்க ப்பட்டன.

## 1905 புரட்சியின் தோல்விக்கான காரணங்கள்.

ருசிய அரசு ஜப்பானுடனான போரில் தோற்கடிக்கப்பட்டிருந்த போதிலும் தனது ராணுவத்தின் மீதான கட்டுப்பாட்டை இழக்காமல் இருந்தது. நாட்டின்பலபாகங்களிலும் ஏற்பட்ட தொழிலாளர்கள் வேலைநிறுத்தங்கள், விவசாயிகள் கிளர்ச்சிகள், மாணவர்களுடைய எழுச்சிகள் யாவும் ஒருங்கிணைக்கப்பட்டு ஒரே புரட்சிகரநோக்கங் களுடன் செயற்படுத்தப்படவில்லை. மேலும் மிதவாதிகள் தங்களுடை -ய கோரிக்கைகள் வெற்றிபெறுவதற்குக் காரணமாகவிருந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொழிலாளர் வேலைநிறுத்தங்களிலும் விவசாயிகளின் கிளர்ச்சிகளிலும் அதிதிருப்தியும், பயமும் கொண்டிருந்தனர். இதனால் சார் மன்னனிடமிருந்து எந்தவிதமானவொரு சீர்திருத்தத்தையும் பெற்றுக்கொள்ளத் தயாராகவிருந்தனர். இதனால் சார்மன்னன் தனது "ஒக்டோபர் அறிக்கை"யிலுள் தனக்கு எதிரானசக்திகளைத் திசைதிருப்பக்கூடியதாக இருந்தது.

இந்த எழுச்சிகளின் மூலம் அதிக பலனைப்பெற்றவர்கள் சமூகப்புரட்சிவாதிகளேயாகும். இவர்கள் விவசாயிகள் மத்தியில் தமது செல்வாக்கை அதிகரித்துக்கொண்டனர். சமூகஜநாயகவாதிகள் அதிக பலனைப்பெறாவிட்டாலும் தொழிலாளர்களுடைய போராட்டங்களில் நேரடியாக ஈடுபட்டார்கள் 'கஉகைகள்' பகுதியில் எல்லாவித தொழிலாளர்களின் வேலைநிறுத்தத்தை தாக்குவதற்கு வந்த 'கறுப்பு நூறுவர்' என்ற காடையர்களை யோசப் ஸ்டாலினின் தலைமையில் துரத்தியடித்தார்கள். அதிகமான சமூகஜனநாயகத் தலைவர்கள் வெளிநாடுகளிலேயே இருந்தனர். லெனின் லண்டனில் பொல்சிவிக்குகளின் மகாநாடொன்றை நடத்திக் கொண்டிருந்தார். மென்சிவிக்குகள் ஜெனிவாவில் தங்களுடைய மகாநாட்டை நடத்தினர்கள்.

சென். பீற்டேர்ஸபேர்க்கில் தொழிலாளர் சோவியத்துக்கள் அமைப்பதில், பொல்சிவிக்குகளும் மென்சிவிக்குகளும் முக்கிய பங்கு வகிக்கவில்லை. மென்சிவிக்குகள் அப்பொழுது ஏற்பட்ட எழுச்சிகளை முதலாளித்துவப்புரட்சிக்கான நடவடிக்கைகள் எனக் கருதினர்கள்.

இந்தக்காலகட்டத்தில் லியோன் ரொட்ஸ்கியும் அவரது சகவான அலக்ஸ்சான்டர் கெல்பிகான்டும் தொழிலாளர்களின் கடமைகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பற்றி மிகத்தெளிவான நிலைப்பாடுகளைக் கொண்டிருந்தனர். சென். பீற்டேர்ஸ்பேர்க்கில் உருவாகிய தொழிலாளர் சோவியத்து க்களை மிதவாதிகளுக்கு எதிராகப் பாவிக்க வேண்டுமென்பதிலும் அந்த சோவியத்துக்களை அதிகாரமிக்க சபைகளாக மாற்ற வேண்டுமென்பதிலும் அவர்கள் மிகவும் கவனம் செலுத்தினர்கள். 1905ம் ஆண்டு நவம்பர் மாதத்திலேயே லெனின் நாடு திரும்பினர். அவர் நாட்டில் நடைபெறும் சகல நடவடிக்கைகளையும் மிகவும் உன்னிப்பாகக் கவனித்துக் கொண்டிருந்தார். இந்த நிகழ்ச்சிகளைப் பற்றிப் பின்பு எழுதும் பொழுது, " 1905ம் ஆண்டின் எழுச்சி புரட்சிக்கான மாபெரும் ஒத்திகை " என விபரித்தார்.

• • • •

## பிரதிநிதிகள் சபை — " டுமா "

1906ம் ஆண்டு பிரதிநிதிசபைகள் பற்றி அறிக்கையொன்று சார் மன்னனால் வெளியிடப்பட்டது. மே மாதம் குரேமிக்கின் என்பவர் பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்டார். ஆனல் இதன் பின் மன்னன் வெளியிட்ட இரண்டாவது அறிக்கையில் பொருளாதாரம், ராணுவம் ஆகிய விடயங்களில் "டுமா" என்ற இந்தப் பிரதிநிதிகள் சபைக்கு எந்தவித அதிகாரமும் கிடையாது என அறிவித்தான்.

ஏப்ரல் 27ம் திகதி தேர்ந்தெடுக்கப்பட்ட "டுமா"ப்பிரதிநிதிகள் 'ரொறிட' மாளிகையில் சந்தித்தார்கள். இச்சபையில் அரசியலமைப்பை வேண்டிநின்ற ஜனநாயகவாதிகளான "கடற்ஸ" 179 அங்கத்தவர்களையும், சார் மன்னனின் ஒக்டோபர் அறிக்கையை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆதரித்த வலதுசாரிகள் "ஒக்டோபரிஸ்ட்ஸ்" 17 அங்கத்தவர்களையும், தேர்தலைப் பகிஷ்கரிக்கின்றோம் என்று கூறிக்கொண்டு அதே வேளையில் 'தொழிலாளர் குழு' என்ற பெயரில் போட்டியிட்ட சமூகப்புரட்சிவாதிகள் 94 அங்கத்தவர்களையும், சமூகஜனநாயகவாதிகள் (மென்ஷிவிக்குகள்) 18 அங்கத்தவர்களையும் கொண்டிருந்தனர். சார் மன்னன் "ஸ்டொலிபின்" என்பவரை பிரதமமந்திரியாக நியமித்தான். இவரை 'கடற்ஸ்' ஏற்றுக்கொள்ளாதபடியால் பாதிக்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் பின்லாந்துக்குச் சென்று அங்கிருந்து மக்களை வரிகளைக் கொடுக்க வேண்டாமென்றும், ராணுவத்தில் சேரவேண்டாமென்றும் அறிக்கை விடுத்தனர். இதைத் தொடர்ந்து பலவிடங்களில் விவசாயிகள் கிளர்ச்சிகள் ஏற்பட்டது. அரசியற் கொலைகள் நடைபெற்றன. இவற்றைத் தடுக்க பிரதம மந்திரி ஸ்டொலிபின் அவசரகால கோடுகளை உருவாக்கி மக்களுக்கு தண்டனைகள் விதித்தான். 1907 ஏப்ரல் மாதத்தில் மட்டும் 683 பேருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது.

இரண்டாவது டுமா 1908 பெப்ரவரி மாதம் 20ம் திகதி தெரிவு செய்யப்பட்டது. தீவிர வலதுசாரிகளும் இடதுசாரிகளும் தெரிவு செய்யப்பட்டனர். சபையினர் ராணுவத்தின் மீதும் அதிகாரிகள் மீதும் அதிகமான விமர்சனங்களை முன்வைத்தனர். பிரதம மந்திரி ஸ்டொலிபின் சமூகஜனநாயகவாதிகள் சார்மன்னனைக்கொலை முயற்சித்தார்கள் எனக் குற்றம்சாட்டி ஜூன் மாதம் 3ம் திகதி சபையைக் கலைத்துவிட்டான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டுமா சபைக்கு, மன்னராட்சிக்கு எதிரானவர்களே தெரிசெய்யப்பட்-டதைக் கண்ட அதிகாரவர்க்கம் நிலப்பிரபுத்துவவர்க்கத்தினருக்குச் சாதகமாக வாக்குரமைச் சட்டத்தைத் திருத்தினர். இதைத் தொடர்ந்து டுமா சபைக்கு வலதுசாரிப் பிறபோக்குவாதிகளே தெரிவு செய்யப்பட்டனர்.

படிப்படியாக 1905 புரட்சியின் பின் மக்களுக்குக் கிடைத்த சுதந்திரங்கள் எல்லாம் பறிக்கப்பட்டன. விவசாயிகளுக்கு சிறு காணிகள் கொடுக்கப்பட்டு, செல்வந்த விவசாயிகளை உருவாக்கிக் கொண்டிருந்தார்கள். இவர்கள் தமது நலன்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக மன்னராட்சியைப் பாதுகாப்பவர்களாக மாறிக் கொண்டிருந்தார்கள்.

• • • •

முதலாவது உலக மகாயுத்தம்

முதலாளித்துவ அரசுகளின் சந்தைக்கான போட்டி 1914இல் உலக மகாயுத்தமாக உருவெடுத்தது. ருசியா, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய அரசுகள் ஜேர்மனிக்கும், ஆஸ்திரியா—கங்கேரிக்கும் எதிராகப் போர் தொடுத்தன. இந்தப் போரினால் ஏற்பட்ட பணவீக்கமும் உணவுப்பஞ்சமும் நாட்டில் வறுமையையும் பட்டினியையும் உருவாக்கி-யது. தொழிலாளர்கள் வாழ்க்கைச்செலவின்உயர்வை எதிர்த்து வேலைநிறுத்தங்களில் இறங்கினார்கள். போரின் ஆரம்பத்தில் ருசிய அரசினால் மக்களுக்கு ஊட்டப்பட்ட தேசியவெறியும் சிறுகச்சிறுதாக வலுவிழக்க ஆரம்பித்தது. செண்ட் பீட்டர்ஸ்பேர்க் என்ற பெயர் ஜேர-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மன் பெயராக இருந்தபடியால் தலைநகரின் பெயரை பெற்ரோகிராட் என்று மாற்றுமளவிற்கு தேசியவெறியை அரசு வளர்த்தது. நாட்டிலேற்பட்டு வந்த அதிருப்திகளைப்பயன்படுத்தி டுமாவிலிருந்த வலதுசாரிகள் தமக்கு அதிகாரங்கள் கூடிய சபை வேண்டுமெனக் கோரிக்கை விடுத்தனர். ஆனால் நிக்கலஸ் மன்னன் அதற்குச் செவி சாய்க்கவில்லை. அவன் தன்னை சகல படைப்பிரிவுகளுக்கும் பிரதம தலைவனாக மாற்றிக்கொண்டதுடன் ஜேர்மனியுடனான போரை வழி நடத்த தலைநகரிலிருந்து 650 கிலோமீட்டர் தொலைவில் இருந்த மகிலவ் என்ற நகரில் தங்கியிருந்தான். அரசபாரங்கள் எல்லாம் அவனது மனைவியான சாரினா(ராணி)விடமே தங்கியிருந்தன. அவள் ஜேர்மன் அரசபரம்பரையைச் சார்ந்திருந்ததாலும், மந்திரதந்திரங்களைச் செய்யக் கூடியவனென்று நம்பப்பட்ட ரஸ்புட்டீன் என்ற சாமியாரின் செல்வாக்குக்குள்பட்டவள் என்று நம்பப்பட்டதாலும் ருசியப்பிரபுக்கள் அவளை வெறுத்தனர். இந்த நிலைமைகளில் வலதுசாரி 'ஒக்டோபறிஸ்ட்'டான குசுக்கோ என்பவன் ஒரு ராணுவப்புரட்சியை நடத்த முயற்சித்தான். பிரபுக்கள் சிலர் ரஸ்புட்டீனைக் கொலை செய்ததுடன் நிக்கலொலஸ் மன்னனின் மாமனொருவனைப் பதவிக்குக் கொண்டுவர முயற்சித்தார்கள். இவ்வாறு மாளிகைக்குள் குத்துவெட்டுக்கள் ஆரம்பமாகின.

## 1917 பெப்ரவரிப்புரட்சி

1917 ஜனவரி மாதம் 9ம் திகதி, 150,000 தொழிலாளர்கள் 1905இன் இரத்தஞாயிறின் ஞாபகார்த்தமாக ஒரு ஊர்வலத்தை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நடத்தினார்கள். அரசாங்கம் இதில் பங்கு கொண்ட சில பொல்சிவி க்குகளையும், தொழிலாளர் குழு அங்கத்தவர்களையும் கைதுசெய்த -து. 14ம் திகதி டுமாசபை கூடியபொழுது அதை ஆதரித்து 80,000 தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்தார்கள். இதைத் தொடர்ந்து சம்பள உயர்வுக்காக 'புரிலோவ்' உலோகத்தொழிற் சாலையிலும் மற்றைய தொழிற்சாலைகளிலும் வேலைநிறுத்தங்கள் ஆரம்பமாகின. அரசு இவற்றை முக்கியமாகக் கருதவில்லை.

பெப்ரவரி 23ம்(மார்ச் 8) திகதி ஆயிரத்திற்கும் மேற்பட்ட பெண்கள் சர்வதேசப்பெண்கள் தினத்தைக் கொண்டாடுமுகமாக கொட்டும் பனியில் ஊர்வலமாகச் சென்றார்கள். இவர்களுடன் வேலை நிறுத்தத்திலீடுபட்டிருந்த புரிலோவ் தொழிலாளர்களும் சேர்ந்து கொண்டார்கள். மக்களுடைய சாதரண உணவான பாணுக்கு மிகவும் தட்டுபாடு ஏற்பட்டிருந்தபடியால் ஊர்வலத்தில் சென்றவர்கள், "எங்களுக்குப் பாண்வேண்டும்" என்ற கோசங்களை எழுப்பினார்கள் இதை அடுத்து 240,000 தொழிலாளர்கள் வேலைநிறுத்தத்தில் குதித்தார்கள். இவர்களுக்கும் அரசபடைகளுக்குமிடையில் மோதல்கள் ஏற்பட்டன. இவற்றைக் கேள்விப்பட்ட நிக்கலஸ் மன்னன் ஊர்வலங் களை நிறுத்துமாறு கட்டளை அனுப்பினான். செமின்ஸ்கிச சதுக்கத்தில் ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் மீது படையினர் துப்பாக்கிப் பிரயோ-கம் செய்ததில் 40 பேர் கொல்லப்பட்டார்கள். நிராயுதபாணிக ளான மக்கள் கொல்லப்படுவதைக்கண்ட இளம் சிப்பாய்கள் தமது அதிகாரிகளின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய மறுத்தார்கள். படை வீரர்கள் அதிகாரிகளுக்கெதிராகக் கலகம் செய்தது மக்களு-

www.tamilarangam.net

ன் ஊர்வலங்களில் கலந்து கொண்டதுடன், அவர்களிடம் தமது ஆயுதங்களையும் கொடுத்தார்கள். ராணுவ அதிகாரிகள் விண்டர்ப்ளேசிறகுள் பின்வாங்கினார்கள். பெற்ரோகிராட் நகரம் ஆயுதம் தாங்கிய மக்களின் கைகளுக்கு வந்தது. இதையறிந்த டூமாசபை அங்கத்தவர்கள் தங்களுக்கு ஒரு பாராளுமன்ற ஆட்சிமுறை வேண்டுமென்று விண்ணப்பிப்பது எனத்தீர்மானித்தார்கள். அன்று மாலை 200 தொழிலாளர் மற்றும் படைகளின் பிரதிநிதிகள் ஒன்றுகூடி 'பெற்ரோகிராட் சோவியத்தை' அமைத்தார்கள்.

குடியரசு

இந்த எழுச்சிகளை அடக்க நிக்கலோஸ் மன்னன் தனக்கு விசுவாசமான படைகளுடன் பெற்ரோகிராட் நோக்கி விரைந்தான். ஆனால் தலைநகருக்கு அருகாமையில் இருந்த புகையிரதஸ்தானங்களெல்லாம் புரட்சியாளர்களின் கட்டுப்பாட்டில் இருந்தபடியால் அவனை பெற்ரோகிராட் செல்ல முடியவில்லை. அவனுடனிருந்த ஜெனரல்கள் மன்னராட்சியுடன் கூடிய பாராளுமன்ற ஆட்சிக்குச் சம்மதிப்பதன் மூலம் நிலமையைச் சமாளிக்க முடியுமென அவனுக்குப் புத்திமதி கூறினார்கள். ஆனால், "ஆட்சி செய்தால் சர்வதிகாரியாக ஆட்சிசெய்வேன் அல்லது அந்த ஆட்சி தேவையில்லை" யென தன்னுடையதும் தனது மகனுடையதுமான முடியுரிமையை தனது சகோதரனை 'கிராண்ட் டியூக் அப் மைகேலுக்குக் கொடுத்தான். ஒரு அரசியலமைப்புச் சபைகூட்டப்பட்டு அதன் மூலம் கொடுக்கப்படும் அரசபதவியைத்தான் தன்னால் ஏற்கமுடியுமெனக் கூறி அரசபதவியை ஏற்க அவன் மறுத்தான்.

www.tamilarangam.net

யாரும் அரசபதவியை ஏற்காதபடியால் ருசியாவின் "றமனேவ்"அரச பரம்பரையின் ஆட்சி முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.
டுமா சபையில் பெரும்பான்மையாக இருந்த மிதவாதிகளின் கைகளில் அவர்கள் சற்றும் எதிர் பார்க்காத விதத்தில் ஒரு "குடியரசு" கிடைத்தது.

• • • • •

பெற்றோகிராட் சோவியத்தும்
தற்காலிக அரசாங்கமும்.

மார்ச் மாதம் 2ம் திகதி டுமா அங்கத்தவர்களினால் தெரிவுசெய்யப்பட்ட செயற்குழுவொன்று இளவரசுலொவ் என்பவன் தலைமையில் ஒரு தற்காலிக அரசாங்கத்தை ஸ்தாபித்தது. வலதுசாரிகளான 'கடற்ஸ்'சும் 'ஒக்டோபறிஸ்ற்'களும் இந்த அரசாங்கத்தில் அங்கம்வகித்தார்கள்.
சகல அரசியற்கைதிகளுக்கும் மன்னிப்பளிக்கப்படுமென்றும், ஜனநாயகஉரிமைகள் மக்களுக்களிக்கப்படுமென்றும், மரணதண்டனை ஒழிக்கப்படுமென்றும் பிரகடனப்படுத்தப்பட்டது.
அரசனுக்குச் சொந்தமான நிலங்கள் அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டன. நாடெங்கிலுமுள்ள கவர்னர்களின் அதிகாரங்கள் 'செம்ஸ்ட்வ்' (முனிசிப்பல்) சபைகளுக்கு மாற்றப்பட்டன. இச்சபைகள் ஒரு பக்கத்திலும், தொழிலாளர்களினால் தெரிவுசெய்யப்பட்ட சோவியத்துகள் மறுபக்கத்திலும் இயங்க ஆரம்பித்தன.
தற்காலிக அரசாங்கம் ஜேர்மனியுடன் நடந்து கொண்டிருந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்தத் தடுமாற்றமான நிலைப்பாடுகளால் பெற்ரோகிராட் சோவியத் தற்காலிக அரசாங்கத்துடன் ஒத்துழைக்கும் கொள்கையையே கடைப்பிடித்தது. சில இடதுசாரிகள் இரண்டு தோணிகளிலும் காலை வைத்துக் கொண்டிருந்தனர். உதாரணமாக 'கெரன்சி' என்பவன் தற்காலிகஅரசாங்கத்தில் நீதிமந்திரியாகவும் பெற்ருேகிராட் சோவியத்தின் உபதலைவராகவும் பதவிவகித்துக் கொண்டிருந்தான். இதனுல் தொழிலாளர் சோவியத்தானது, ஜேர்மனியுடன் போர்நடத்தப்பட வேண்டுமென்ற தற்காலிக அரசாங்கத்தின் கொள்கையையும் ஆதரித்துக்கொண்டிருந்தது. பொல்சிவிக்குகளின் இளம்தலைவரான மொல-ட்டோவ் தொழிலாளர்சோவியத் சகல அதிகாரங்களையும் கைப்ப-ற்ற வேண்டுமென அறிக்கைகளை வெளியிட்டுக் கொண்டிருந்தார். ஆனல் யோசப் ஸ்டாலினும், கெமனேவும் சைபீரியாசசிறையிலிருந்து திரும்பியபின்பு தற்காலிகஅரசாங்கத்துடன் ஒரு வரையறுக்கப்பட்ட முறையில் ஒத்துழைப்பது என மத்தியகமிட்டி தீர்மானித்தது. பெற்ரோகிராட்டில் இரண்டு அரசாங்கங்கள் இயங்கிக்கொண்டிருந்த-ன. எந்தவித அதிகாரங்களுமில்லாமல் ஆட்சிப் பொறுப்பை வைத்-துக் கொண்டிருந்தது, டுமாசபையிலிருந்து தற்காலிக அரசாங்கம். சகல துறைகளிலும் செல்வாக்கைப் பெற்றிருந்து தொழிலாளர் சோவியத்தானது ஆட்சிப் பொறுப்பை கையிலெடுக்கத் தயங்கிக் கொண்டிருந்தது.

லெனின் ஏப்ரல் அறிக்கை.

சுவிற்சலாந்தில் வாழ்ந்து கொண்டிருந்த லெனின், பெப்ரவரிப் புரட்சியைப் பற்றிக் கேள்விப்பட்டதுடன் ருசியா செல்ல வேண்டு-

www.tamilarangam.net

மென்ற அவருடனிருந்தார். அலக்சாண்டர் கொலொன்டின் உதவியுடன் ஒரு 'சீல்'வைக்கப்பட்ட ரயில்வண்டி மூலம் ஜேர்மனூடாக லெனினும் வேறு பல சோசலிஸ்டுகளும் ருசியா செல்வதற்கு ஒழுங்குசெய்யப் பட்டது.

ஏப்ரல் மாதம் 3ம் திகதி லெனின் பெற்ரோகிராட்டிற்கு வந்து சேர்ந்தார். மறுநாள் பொல்சிவிக்குகளின் கூட்டத்தில் தனது புதிய கொள்கையின் அடிப்படையில் உரைநிகழ்த்தினார். இது 'பிரவ்டாவில்' பிரசுரமாகியது. இதுவே பிரசித்தி பெற்ற 'ஏப்ரல் அறிக்கை'.

"தற்காலிக அரசாங்கத்திற்கு எந்தவிதமான ஒத்துழைப்பையும் அளிப்பதில்லை. உடனடியாக போர் நிறுத்தப்பட வேண்டுமென்ற பிரசாரத்தில் ஈடுபடவேண்டும். நிலங்கள் தேசியமயமாக்கப்பட வேண்டும். தொழிலாளர்களின் சோவியத்துக்களுக்கு சகல அதிகாரங்களும் கொடுக்கப்பட வேண்டும். பாராளுமன்றத்துடன் கூடிய ஒரு குடியரசு நிராகரிக்கப்பட வேண்டும். தொழிலாளர்கள், விவசாயிகள் பிரதிநிதிகளின் சோவியத்துக்களின் குடியரசு அமைக்கப்படவேண்டும்."

இந்தப்பிரகடனத்தை ஆதரித்த பொல்சிவிக்குகள், சோவியத்துகளில் தமக்குப் பெரும்பான்மை கிடைக்கும்பட்சத்தில் இதை நடைமுறைப் படுத்தவும் தீர்மானித்தார்கள். 26,000 அங்கத்தவர்களை மட்டும் கொண்ட பொல்சிவிக்கட்சியின் இந்தக் கொள்கைப் பிரகடனத்தைப் பல இடதுசாரிகள் பைத்தியக்காரத்தனமானதெனக் கருதினார்கள்.

## கூட்டுஅரசாங்கம்

தடுமாற்றத்திலிருந்த சமூகப்புரட்சிவாதிகளும், மென்சிவிக்குகளும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மே மாதம் 5ம் திகதி தற்காலிக அரசாங்கத்துடன் கூட்டுச்சேர்ந்தார்கள். கூட்டரசாங்கத்தில் கெரன்சியுடன் ஆறு இடதுசாரிகள் மந்திரிகளாளாக்கப்பட்டனர். ஆனால் இந்த அரசாங்கத்திலுள்ள இருந்த முரண்பாடுகளினால் மக்கள் மத்தியில் மதிப்பிழந்து கொண்டு வந்தது. சோசலிஸ்டுகள் வேண்டிய நிலச்சீர்திருத்தங்களையோ அல்லது மற்றைய மாற்றங்களைச் செய்வதற்கு வலதுசாரிகள் முட்டுக்கட்டையாக இருந்தனர். அதே வேளையில் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கும் வலதுசாரிகளின் தவறுகளுக்கும், இவர்களும் உடந்தையாக இருப்பதாக மக்கள் எண்ணினார்கள்.

பெரும் தோட்டங்களை தங்களுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்த விவசாயிகள் மீது சோசலிச மந்திரி சேர்னவ் எடுத்த நடவடிக்கைகள் மக்களின் வெறுப்பைச் சம்பாதித்தது. தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் குழுக்கள் அதிகாரங்களைத் தமது கைகளுக்கெடுத்துக் கொண்டிருந்தன. பொல்சிவிக்குகளின் தீவிர அரசியல் பிரசாரத்தினால் ஆதரவு பெருகிக் கொண்டிருந்தது. அங்கத்தவர்கள் தொகை 200,000 ஆக உயர்ந்திருந்தது. ருசியா முழுவதும் 41 பொல்சிவிக் பத்திரிகைகள் வெளிவந்து கொண்டிருந்தன. லெனின் நம்பிக்கையான தொழிலாளர்களைக்கொண்டு 10,000-ம் செங்காவலர்களை உருவாக்கிக் கொண்டிருந்தார்.

ஜூன் மாதம் 5திகதி அகில ருசிய சோவியத்துக்களின் மகாநாடு வட்டப்பட்டபொழுது 105 பொல்சிவிக்குகள் பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்யப்பட்டார்கள். 248 மென்சிவிக்குகளும், 285 சமூகப் புரட்சிவாதிகளும் முறையே தெரிவுசெய்யப்பட்டார்கள். பொல்சிவி-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

க்குகள் முன்னையவிட அதிகமாகவே தெரிவுசெய்யப்பட்டிருந்தார்கள். மகாநாட்டில் சிறுபான்மையினராக இருந்தபோதிலும் பெற்றோகி-ராட்டில் மிகுந்த செல்வாக்கை பொல்சிவிக்குகள் பெற்றிருந்தார்கள்.

## ஜூலை நாட்கள்

ஜூன் 18ம் திகதி சோவியத் மகாநாடு தலைநகரான பெற்றோ கிராட்டில் ஒரு ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை ஏற்பாடு செய்திருந்தது. அதில் பங்குகொண்டவர்கள் பொல்சிவிக்குகளின் சுலோகங்களையே பதாகைகளில் கொண்டு சென்றார்கள்.

ஜூலை 3ம் திகதி தொழிலாளர்களும், கடற்படைவீரர்களும் ஊர்வல-மாகச் சென்று தொழிலாளர்கள் சோவியத்துக்கள் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டுமென்று கோசமிட்டனர். அவர்களுக்கு கூட்டரசாங்-கத்திலேற்பட்ட ஏமாற்றமே இதற்குக் காரணமாக இருந்தது. சோவியத்துக்களில் பெரும்பான்மையாக இருந்த மென்சிவிக்குகளும் சமூகப்புரட்சிவாதிகளும் இதற்குத்தயாராக இருக்கவில்லை. சிறுபான்மையாக இருந்த பொல்சிவிக்குகள் இந்த எழுச்சியின் போது மிகவும் ஜாக்கிரதையாக நடந்து கொண்டார்கள். வேலைநிறுத்த-ங்களும் ஆர்ப்பாட்டங்களும் அழிப்பாதையில் போகாமல் கட்டுப் பாட்டுக்குள் வைத்திருந்தனர்.

ஜூலை ஏழாம்திகதி தலைநகருக்கு வெளியிலிருந்து கொண்டுவரப்-பட்ட ராணுவம் ஊர்வலங்களை அடக்க முயற்சித்தது. கூட்டரசாங்-கத்தின் பிரதமமந்திரிப்பதவியை ஏற்ற கெரன்ஸ்கி பொல்சிவிக்கு-களே இந்த குழப்பங்களுக்குக் காரணமென்றும் அவர்கள் ஜேர்மன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரசாங்கத்தின் ஏஜன்டுகள் என்று குற்றம் சாட்டினான்.
லெனினும், சினோவியும் தலைமறைவானார்கள். கெமினேவ்வும், லியோன் ரொட்ஸ்கியும், லுனட்ஸ்கியும் கைது செய்யப்பட்டார்கள்.
கெரன்ஸ்கியும் தான் பொல்சிவிக்குகளை அடக்கிவிட்டதாக எண்ணிக் கொண்டு தனது பதவியை ஸ்திரமாக்குவதிலீடுபட்டான். அவன் 'கொனிலோவ்' என்பவனை படைகளின் தளபதியாக நியமித்தான்.
ஆளும் வர்க்கத்தினையும் அதன் நலன்களையும் காப்பாற்றுவதுதான் தனது முதற்கடமையெனக் கொண்டவன் கொனிலோவ். அவன் பிற்-போக்குராணுவ அதிகாரிகளுடன் இணைந்து தொழிலாளர்களின் அமைப்புகளை அழிக்கவும் பெற்றோகிராட்டின் ஆளுமையை இடதுசா-ரிகளிடமிருந்து கைப்பற்றவும் திட்டம் தீட்டினான்.

## கொனிலோவின் எதிர்ப்புரட்சி

ஆகஸ்ட் 21ம் திகதி பெற்றோகிராட்டின் ஆர்ப்பாட்டங்களை அடக்க ஒரு சிறிய படையை கெரன்ஸ்கி அழைத்திருந்தான். அதை இதைப்பாவித்து, கொனிலோவ் தான்தோன்றித்தனமான நடவடிக்கைகளிலீடுபடுவதைக் கண்டு, கெரன்ஸ்கி அவனைப் பதவியிலிருந்து நீக்கினான். இதை எதிர்த்து அரசாங்கத்திலிருந்து வலதுசாரிகளான 'கட-டஸ்' விலகினார்கள். பதவியிலிருந்து நீக்கப்பட்ட கொனிலோவ், "ஜேர்மனிக்கெதிரான போர் தொடர்ந்தும் நடத்தப்பட வேண்டும். அரசியலமைப்புச்சபை கூட்டப்பட வேண்டும்" என்று கோசங்களுடன் பெற்றோகிராட்டை நோக்கிப் படையெடுத்தான்.
இதைக்கண்டு அஞ்சிய கெரன்ஸ்கி தான் சிறையிலடைத்த பொல்சிவி-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கிருகளிடம் பெற்றோகிராட்டைக் காப்பாற்றுமாறு வேண்டுகோள் விடுத்தான். சிறையிலிருந்த பொல்சிவிக் தலைவர்கள் விடுவிக்கப்பட்டனர். பெற்றோகிராட்டைக் காப்பாற்றுவதற்காக ஒரு இடைசாரிக்குழுவொன்று அமைக்கப்பட்டது.

தொழிலாளர்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டன. பொல்சிவிக் செம் காவலர்களும் ஆயுதபாணிகளாயினர்.

கொனிலோவ் படைகளுடன் வந்த ரயிற்பாதைகளெல்லாம் பொல்சிவிக்குகளின் கட்டுப்பாட்டில் இருந்ததால் அவலை முன்னேறமுடியவில்லை. பொல்சிவிக்குகளின் அரசியல் பிரசாரகர்கள் கொனிலோவுடன் வந்த சிப்பாய்கள் மத்தியில் உண்மைகளை விளக்கிப் பிரசாரம் செய்தார்கள். ரயிற்பாதைகளும் தொலைபேசித்தொடர்புகளும் இல்லாது போனதாலும், அரசியற் பிரசாரத்தினாலும், கொனிலோவுடன் வந்த படைவீரர்கள் எவ்வித போராட்டமுமின்றி கலைந்து போனார்கள். செப்டம்பர் 2ம் திகதி கொனிலோவ் கைதுசெய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டான்.

<u>பொல்சிவிக்குகளுக்கு மக்களின் ஆதரவு</u>

ருசிய ராணுவத்தில் ஏற்பட்டு வந்த குழப்பநிலை காரணமாகப் பல சிப்பாய்கள் வெளியேறினார்கள். ராணுவ அதிகாரிகள் கொலை செய்யப்பட்டார்கள்.

இலையுதிர் காலத்தில் அதிக கூலிகளுக்கான வேலைநிறுத்தங்கள் ஆரம்பித்தன. வேலைநிறுத்தங்களும் கதவடைப்புகளும் தொழிலாளர்களை மீண்டும் போராட்டக்களத்திற்குக் கொண்டுவந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தொழிலாளர்கள், சோவியத்துக்களுக்குத் தெரிவு செய்யும் பிரதிநிதி-களை மீளஅழைக்கும் உரிமையையும் பெற்றிருந்ததால், முன்பு சோவி-யத்திற்குத் தெரிவு செய்யப்பட்டிருந்தவர்கள் மீளஅழைக்கப்பட்டு பொல்சிவிக்குகள் அந்த இடங்களுக்கு தெரிவு செய்யப்பட்டார்கள். ஆகஸ்ட் 31ல் பெற்றோகிராட் சோவியத்தில் பொல்சிவிக்குகள் பெரும்பான்மை ஸ்தானங்களைப்பெற்றனர். செப்டம்பர் 5ல் மொஸ்கோவி சோவியத்திலும் பெரும்பான்மை பெற்றதையடுத்து பல தொழில்வளர்ச்சி பெற்ற நகரங்களிலுள்ள சோவியத்துகளிலும் பொல்சிவிக்குகள் பெரும்பான்மை ஸ்தானங்களைப்பெற்றனர்.

இவ்வாறு பொல்சிவிக்குகளுக்குப் பெருகிவந்த ஆதரவு களுக்கும், தொழிலாளர்களின் கிளர்ச்சிகளுக்குமமத்தியிலும் கெரன்ஸ்கி தனது அரசாங்கத்தை ஸ்திரப்படுத்த முயன்று கொண்டிருந்தான். செப்டம்பர் 11ம் திகதி ஜனநாயகவாதிகளின் மகாநாடொன்றை கூட்டினன். பல்வேறு இடதுசாரிகளுடன், பொல்சிவிக்குகளும் அழைக்க ப்பட்டிருந்தனர். "இந்த மகாநாடு எந்தவிதமான பயனையும் தர ப்போவதில்லை" என லியோன் றொட்ஸ்கி உரையாற்றிய பின்பு மகாநாட்டிலிருந்து பொல்சிவிக்குகள் வெளியேறினர்கள். செப்டம்பர் 23ம் திகதி லியோன் றொட்ஸ்கி பெற்றோகிராட் சோவியத்திற்குத் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.


## ஒக்டோபர் புரட்சி

செப்டம்பர் மாத ஆரம்பத்திலிருந்து அரசைக்கைப்பற்றும் தருணம் வந்துவிட்டது என லெனின் தீர்க்கமாக நம்பினர். இதனல் அவர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




பெற்றோகிராட் 1917

மறைந்து வாழ்ந்து கொண்டிருந்த பின்லாந்திலிருந்து உடனடியான நடவடிக்கைகளில் ஈடுபடும்படி பொல்சிவிக் மத்தியகமிட்டிக்கு வேண்டுகோள்களை அனுப்பியவண்ணமிருந்தார். அரசைக் கைப்பற்றுவ-தற்கான காலம் தவறவிடப்படக் கூடாதென்பது அவரின் நோக்கமாகவிருந்தது. அது தவறவிடப்பட்டால் மக்களுக்கு பொல்சிவிக்குகளுக்கு மீதிருந்த நம்பிக்கை சிதைந்துவிடுமென்றும், பின்பு எதிர்ப்புரட்சிக்கு முகம் கொடுக்க நேரிடும் எனவும் அவர் அஞ்சினர்.

www.tamilarangam.net

ஒக்டோபர் 10ம் திகதி லெனின் பெற்றோகிராட்டிற்கு வந்து பொல்சிவிக்கட்சியின் மத்திய கமிட்டியில் தனது அரசைக்கைப்பற்-றும் தீர்மானத்தை முன்வைத்தார். பலமணிநேர விவாதத்தின் பின் 12 பேர் கொண்ட மத்தியகமிட்டிக்கூட்டத்தில், பத்துப்பேர்களின் ஆதரவுடன் புரட்சிக்கான தீர்மானம் நிறைவேறியது. 'சினோவியும், கெமினேவும் எதிர்த்து வாக்களித்தார்கள். புரட்சிக்கான நேரம் வரவில்லை' என்பதே அவர்களுடைய வாதமாக இருந்தது.

ஒக்டோபர் 9ம் திகதி பெற்றோகிராட் சோவியத் ஒரு புரட்சி ராணுவக்குழுவை உருவாக்கியது. இது தலைநகரின் பாதுகாப்புக் களை மேற்பார்வையிடுவதற்காகவே உருவாக்கப்பட்டது. தொழிலா-ளர்களின் அழுமையிலிருந்து தலைநகரத்தை ஜேர்மனியபடைகளுக்கு விட்டுக்கொடுக்க அரசாங்கம் தீர்மானிக்கலாமென்ற அச்சமே இதற் குக் காரணமாக இருந்தது. இந்தக் கமிட்டியிலும் அதிகமான பொல் சிவிக்குகள் இருந்தபடியால் இந்தக் கமிட்டியும் லியோன் ரொட்ஸ்கி யின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது.

ஒக்டோபர் 21ம் திகதி பெற்றோகிராட்டிலிருந்த சகல படைகளும் புரட்சிராணுவக்குழுவின் தலைமையை ஏற்றுக் கொண்டன. எந்தப் பக்கம் சாருவதென்று தீர்மானிக்காமலிருந்த படைவீரர்கள் பீட்டர் —போல் கோட்டையில் இருந்தார்கள். இவர்களுக்கு ஒக்டோபர் 23ம் திகதி லியோன் ரொட்ஸ்கி உரையாற்றிய பின்பு பொல்சிவி க்குகளுக்கு ஆதரவு கொடுப்பது என தீர்மானித்தார்கள். இதன் பல னாக 100,000 துப்பாக்கிகள் பொல்சிவிக்குகளின் கட்டுப்பாட்டு க்குள் கொண்டுவரப்பட்டன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இந்த நடவடிக்கைகளைப் பற்றி அறிந்த பிரதமமந்திரி கெரன்ஸ்கி எதிர் நடவடிக்கைகளை ஆரம்பித்தான். ஒக்டோபர் 24ம் திகதி காலை இரண்டு பொல்சிவிக் பத்திரிகைக் காரியாலயங்களை மூடிவித்தான். அத்துடன் "அரோரா" என்ற கப்பலை விண்டர்ப்பேலஸ் மாளிகைக்கு அருகாமைக்கு கொண்டு செல்லுமாறு உத்தரவிட்டான்.

ஒக்டோபர் 25 (நவம்பர் 7) – புரட்சிதினம்

ஒக்டோபர் 25, அகில ருசிய சோவியத்துக்களின் மகாநாடு கூட்டப்படுமென அறிவிக்கப்பட்டதுடன், புரட்சிகர நடவடிக்கைகள் உச்சக்கட்டத்தை அடைந்தன. பொல்சிவிக்குகள் அரசாங்கத்துடன் மோதுவதெனத் தீர்மானித்தனர்.

மூடப்பட்டிருந்த இரண்டு பத்திரிகைக் காரியாலயங்களும் திறக்கப்பட்டன. "அரோரா" கப்பலுக்கு கெரன்ஸ்கியினால் கொடுக்கப்பட்ட கட்டளைகள், புரட்சிராணுவக்குழுவினால் நிராகரிக்கப்பட்டன.

பொல்சிவிக்குகள் இயங்கிவந்த சோமல்னிமண்டபத்தின் பாதுகாப்புக்கள் உறுதியாக்கப்பட்டன.

அன்று மாலை கெரன்ஸ்கி தனது அரசாங்கத்திற்கு ஆதரவு தரும்படி 'டுமா'ப்பிரதிநிதிகளிடம் வேண்டினர். பொல்சிவிக்குகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்கு, உடனடியாக ஜேர்மனியுடன்சமாதானமும், நிலச்சீர்திருத்தங்களும் செய்யப்பட வேண்டுமென மென்சிவிக்குகளும் சமூகப்புரட்சிவாதிகளும் வாதிட்டனர். ஆனால்....

அதே நேரத்தில் லியோன் ரொட்ஸ்கி அரசைக்கைப்பற்றுவதற்கான கட்டளைகளைப் பிறப்பித்தார். லெனின் மாறுவேடத்தில் சோமல்னி

www.tamilarangam.net

மண்டபத்திற்கு வந்த போது புரட்சி செயற்பட்டுக்கொண்டிருந்தது. இரவு முழுவதும் செ காவலர்களும், பொல்சிவிக்சார்பான சிப்பாய் களும் கேந்திரமுக்கியத்துவம்வாய்ந்த ஸ்தானங்களையெல்லாம் தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துகொண்டிருந்தார்கள். புகையிரதஸ்தா-னங்கள், தபால், தந்தி, தொலைபேசி நிலயங்கள், தேசியவங்கி, பாரா-ளுமன்றமண்டபம் எல்லாம் செங்காவலர்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்தன. இவ்வாறு அரசயந்திரங்கள் புரட்சியாளர்களின் கைகளுக்கு மாறிக்கொண்டிருந்த வேளையில் கெரன்ஸ்கி தலைநகரிலிருந்து தப்பி ஓடினான்.

ஒரு சித்தாந்தம் வரலாற்று உண்மையானது

பாராளுமன்றத்திற்கானசபை செங்காவலர்களினால் கலைக்கப்பட்டது. விண்டர்ப்பேலசில் தங்கியிருந்த மந்திரிகள் கைதுசெய்யப்பட்டதுடன் தற்காலிக அரசாங்கம் பதவியிழந்தது.

புரட்சிகரசோவியத் அரசாங்கம் அமைக்கப்பட்டுவிட்டதென லெனினும், ரொட்ஸ்கியும் பெற்றோகிராட் சோவியத்தில் அறிவித்தார்கள்.

அகில ருசிய சோவியத்துக்களின் மகாநாடு சொமல்னி மண்டபத்தில் நடந்துகொண்டிருந்தது. 650 அங்கத்தவர்களில் 390 பொல்சிவிக் குகளும், 80 மென்சிவிக்குகளும் 180 சமூகப்புரட்சிவாதிகளுமிருந்தார் ர்கள். கெமனேவ் மகாநாட்டிற்குத் தலைமைவகித்தார்.

ஒக்டோபர் 26ம் திகதி அகில ருசிய சோவியத்துக்களின் மகா நாட்டிற்குச் சமூகமளித்த லெனின், வெற்றிகளிப்புடன்ஆரவாரம் செய்துகொண்டிருந்த பிரதிநிதிகள் மத்தியில் உரையாற்றினார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"நாம் இப்பொழுது சோசலிச அமைப்பைக்கட்டியெழுப்ப ஆரம்பிக்கின்றோம்" என்ற வார்த்தைகளை அவர் பேசி முடித்ததும் கரகோஷம் 'சொமல்னி' மண்டபத்தை அதிரவைத்தது.

முதலாவதாகச் சமாதானத்திற்கான தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அரசுகளுக்கிடையிலான இரகசிய ஒப்பந்தங்களும் பேச்சுவார்த்தைகளும் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டுமெனவும், நிலங்கள் யாவும் தேசியமயமாக்கப்பட வேண்டுமெனவும் தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

புதிய புரட்சிகர அரசாங்கம் தெரிவு செய்யப்பட்டது.

லெனின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார்.

லியோன் ரொட்ஸ்கி வெளிநாட்டு விடயங்களுக்குப் பொறுப்பாகவும் யோசப் ஸ்டாலின் தேசிய இனங்களுக்குப் பொறுப்பாகவும் தெரிவுசெய்யப்பட்டார்கள். மற்றைய பொறுப்புகளுக்கும் பொல்சிவிக்குகள் தெரிவு செய்யப்பட்டார்கள். சபை பலத்த கரகோஷத்துடன் இவற்றை அங்கீகரித்தது. இறுதியாக 2/3 பொல்சிவிக்குகளையும் 1/3 மற்றைய கட்சி அங்கத்தவர்களையும் கொண்ட செயற்குழு தெரிவுசெய்யப்பட்டது. அதிகாலை 5 மணிக்கு இந்த மகாநாடு முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. மற்றைய நகரங்களிலுள்ள சோவியத்துக்கள் புதிய புரட்சிகர அரசாங்கத்தை அங்கீகரித்தன.

வரலாற்றின் முதலாவது சமதர்மப்புரட்சி மக்கள் அங்கீகாரத்துடன் நிறைவுபெற்றது. ஒரு சித்தாந்தம் வரலாற்று உண்மையாகியது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சிந்தனை



சுதந்திரமான கருத்துப் பரிமாறல்கள் மூலமே

சிந்தனை உருவாகின்றது.

கடிதங்கள், கட்டுரைகள் மற்றும் சகல விடயங்களுக்கும்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி.


| | |
|---|---|
| ஆசிரியர் குழு, | Editors, |
| சிந்தனை | SINTHANAI |
| ஒல்கா ஸ்ரானா, 49 | Olga str 49, |
| 7 ஸ்ருட்காட் 1, | 7-Stuttgart 1. |
| மேற்கு ஜேர்மனி. | West Germany. |


'சிந்தனை' இதழ்களை இலங்கையில் பெறுவதற்குத் தொடர்பு

கொள்ள வேண்டிய முகவரி -


SINTHANAI,
119,University road,
Rathanapitya,
BORALASGAMUWA
SRILANKA




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# Sinthanai

Estd: 1985 4/88

All comunications shall be addressed to:

Editors,
SINTHANAI
Olga str.49,
7000Stuttgart1
West Germany

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிந்தனை இதழ்களைத் தொடர்ச்சியாகப் பெறுவதற்கு நீங்கள் செலுத்த வேண்டிய அன்பளிப்பு 20 டி.எம். மட்டுமேயாகும்.

